KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 20 March 2026 இதழ்:- 11

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இருந்து பின்வாங்கிய தமிழரசுக்கட்சி! தமிழரசுக்கட்சியைப் புகழ்ந்த பிமல் ரத்தநாயக்க



ஊழல் மோசடி குற்றச்சாட்டை முன் வைத்து வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்ப மிடாமலிருக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. மூன்று பிரதான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த தீர்மானத்தை தமிழரசுக் கட்சி எடுத்துள் ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளு மன்ற குழு கூட்டம் 17 மார்ச் 2026 செவ்வாய்க் கிழமை பாராளுமன்றத்திலுள்ள கட்சி அலுவலகத்தில் பாராளுமன்றக் குழுத்தலைவரான மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (4ம் பக்கம் பார்க்க)

## ஊசலாடும் வெளியுறவுக் கொள்கை

அமெரிக்க நீர்மூழ்கியினால், ஈரானின் ஐ.ஆர்.ஐ.எஸ். டெனா போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம், இலங்கை யின் இறைமைக்கு மாத்திரமல்ல, வெளியுறவுக் கொள்கைக்கும் கூட சவாலானதாக மாறியிருக்கிறது.(13ம் பக்கம் பார்க்க)

# ஈரான் போர்:- டிரம்ப் அரசுக்கு விழுந்த முதல் அடி!

## மனசாட்சிக்கு விரோதமாக செயற்பட முடியாது! உயர்மட்ட அதிகாரி அதிரடியாக ராஜினாமா!







அமெரிக்காவின் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் (National Counterterrorism Center) இயக்குனர் ஜோ கென்ட் (Joe Kent). ஈரான் மீதான போர் தொடங்கி 18 நாட்களே ஆன நிலையில் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். (3ம் பக்கம் பார்க்க)

THINKING OF
# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com
*Your neighborhood sales representative*



## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

RE/MAX ACE REALTY INC., BROKERAGE — EXPERIENCE THE DIFFERENCE — INDEPENDENTLY OWNED & OPERATED
We are ace

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com


MLS


23 Years Real Estate Experience


150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada
**Bus: 416-293-4500**




**• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY**

### Adelaide Ave E / Simcoe St

**Oshawa** $699,000
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area


### Kingston Rd & Sheppard Ave E

**Scarborough** $710,000
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area


### Islington Ave / Steeles Ave W

**Toronto** $749,000
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse

### Neilson Road & Sheppard

**Scarborough** $839,000
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!

### Danforth and Dawes


**Toronto** $839,999
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views


### Williamson & Westney

**Ajax** $849,000
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home


### Rogers and Dufferin St

**Toronto** $849,999
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom


### Markham Rd & Lawrence Ave

**Scarborough** $999,000
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow

### Harmony Road / Conlin Road

**Oshawa** $999,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom


### Cameo St / Burkolder Dr

**Pickering** $999,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home


### Hwy10 / Hwy 89

**Shelburne** $999,900
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home


### Markham/Steeles

**Markham** $999,999
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

### Markham Rd/ Lawrence Ave E
FOR LEASE

**Scarborough** $2,700
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

### Markham Rd & Sheppard Ave
FOR LEASE

**Scarborough** $2,250
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

### Simcoe St/ Windfields Farm Dr
FOR LEASE

**Oshawa** $1,500
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

### Markham & Denison
FOR LEASE

**Markham** $1,450
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# ஈரான் போர்:- டிரம்ப் அரசுக்கு விழுந்த முதல் அடி! மனசாட்சிக்கு விரோதமாக செயற்பட முடியாது! உயர்மட்ட அதிகாரி அதிரடியாக ராஜினாமா!



அமெரிக்காவின் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் (National Counterterrorism Center) இயக்குனர் ஜோ கென்ட் (Joe Kent), ஈரான் மீதான போர் தொடங்கி 18 நாட்களே ஆன நிலையில் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். டொனால்ட் டிரம்ப் நிர்வாகத்தின் ஈரான் கொள்கைக்கு எதிராக மூத்த அதிகாரி ஒருவர் பதவி விலகுவது இதுவே முதல் முறை. இந்த ராஜினாமா வாஷிங்டன் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படு த்தியுள்ளது.

ஈரான் அமெரிக்காவிற்கு உடனடி அச்சு றுத்தல் எதுவும் விடுக்கவில்லை. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்ற இந்த நடவடிக்கையை எனது மனசாட்சிக்கு விரோதமாக ஆதரிக்க முடியாது என ஜோ கென்ட் தனது ராஜினாமா கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிலுள்ள அதன் செல்வாக்கு மிக்க லாபிகளின் அழுத்தத்தின் காரணமாகவே இந்தப் போர் தொடங்கப்பட்டதாக கென்ட் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த ராஜினாமா டிரம்ப் ஆதரவு குடியரசுக் கட்சிக்குள் பெரும் பிளவை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, முடிவில் லாப் போர்களை நிறுத்தப் போவதாக டிரம்ப் அளித்த வாக்குறுதியை நம்பி அவருக்கு ஆதரவளித்த தலையீட்டு எதிர்ப்பு' (Anti-interventionist) பிரி வினர் தற்போது கடும் அதிருப்தியில் உள்ளனர்.

இந்த ராஜினாமா குறித்து கருத்து தெரிவித்த அதிபர் டிரம்ப், கென்ட் ஒரு பலவீனமான நபர் என்று விமர்சித்துள் ளார். அவர் எப்போதுமே தேசிய பாது காப்பு விஷயத்தில் சாக்குப்போக்கு களைக் கூறுபவர். ஈரான் ஒரு அச்சுறு த்தல் இல்லை என்று கூறிய அவர் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவது நல்லது தான் என்று டிரம்ப் அலட்சிய மாகப் பதிலளித்துள்ளார்.

இதற்கிடையில் கென்ட்டின் மேலதிகாரி யும் தேசிய புலனாய்வு இயக்குநருமான துளசி கப்பார்ட் (Tulsi Gabbard) தர்ம சங்கடமான நிலையில் உள்ளார். அவர் அதிபரின் முடிவை ஆதரித்து அறிக்கை வெளியிட்டாலும், கென்ட்டின் பெயரையோ அல்லது அவர் சுமத்தி யுள்ள குற்றச் சாட்டுகளையோ குறிப் பிடாமல் மௌனம் காப்பது அரசியல் அரங்கில் கவனிக்கத்தக்க ஒன்றாக உள்ளது.

ஜோ கென்ட் ஒரு போர் வீரர், அவர் 11 முறை போர்க்களத்தில் பணியாற்றியவர். 2019ஆம் ஆண்டு சிரியாவில் நடந்த ஒரு தற்கொலைத் தாக்குதலில் அவரது மனைவி ஷானன் கொல்லப்பட்டார். அமெரிக்கர்களுக்கு எந்தப் பயனும் தராத, இஸ்ரேலால் திட்டமிடப்பட்ட போர்க்களங்களுக்கு அடுத்த தலை முறையை என்னால் அனுப்ப முடி யாது என்று அவர் தனது கடிதத்தில் உருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

டிரம்பின் தீவிர ஆதரவாளரான டக்கர் கார்ல்சன், கென்ட்டை ஒரு சிறந்த ஹீரோ என்று புகழ்ந்துள்ளார். அதே சமயம், செனட்டர் மார்க் வார்னர் போன்றவர்கள் கென்ட்டின் பழைய அரசியல் செயல்பாடுகளை விமர்சித் தாலும், ஈரான் போருக்கு நியாயமான ஆதாரங்கள் இல்லை என்ற அவரது கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இருந்து பின்வாங்கிய தமிழரசுக்கட்சி! தமிழரசுக்கட்சியைப் புகழ்ந்த பிமல் ரத்தநாயக்க



ஊழல் மோசடி குற்றச்சாட்டை முன் வைத்து வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிடாமலிருக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. மூன்று பிரதான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த தீர்மானத்தை தமிழரசுக் கட்சி எடுத்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற குழு கூட்டம் 17 மார்ச் 2026 செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்திலுள்ள கட்சி அலுவலகத்தில் பாராளுமன்றக் குழுத்தலைவரான மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தலைமையில் கூடியது.

இச்சந்தர்ப்பத்தில் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஆராயப்பட்டது.

வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளமை, அமைச்சர் மீதான நிலக்கரி மோசடிக் குற்றச்சாட்டுத் தொடர்பில் போதுமான ஆதாரங்கள் முன்வைக்கப் படாமை, நாட்டில் தற்போது பாரிய எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்படும் என்ற மூன்று காரணிகளின் அடிப்படையில் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிடாமலிருக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை சபை முதல்வர் பாராட்டியுள்ளார். எதிர்க்கட்சி எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை தமிழரசுக் கட்சியினரை எதிர்க்கட்சிகள் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 17 மார்ச் 2026 செவ்வாய்க்கிழமை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட எம்பி குகதாசன் விவாதத்தில் உரையாற்றிய பின்னர், தமது உரையை ஆரம்பித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட விவாதத்தில் உரையாற்றும் போது தமிழரசுக் கட்சி எம்பிக்கள் நியாயமான வகையில் சாதக, பாதகங்களை எடுத்துக் கூறி சிறந்த உரைகளை நிகழ்த்துகின்றனர். விமர்சனங்களை முன் வைத்தாலும் அவர்கள் அதனை சிறந்த முறையில் முன் வைப்பதைக் காண முடிகிறது. அவர்களது உடல் மொழி கூட அதனை வெளிக்காட்டுகிறது.

ஆனால் சபையில் எதிர்க்கட்சியில் உள்ள சிலர் உரையாற்றும் போது மிகவும் மோசமான விதமாகவே உரையாற்றுகின்றனர். நாடு தொடர்பில் சிந்திக்காமல் தாம் இழந்த அதிகாரத்தை மீண்டும் எவ்வாறு கைப்பற்றுவது என்ற குறுகிய நோக்கத்துடனேயே அவர்கள் உரையாற்றுகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஏவும் ஏவுகணை இங்கு வந்து விழுந்தாவது தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியுமா என்ற சிந்தனையோடு செயற்படுகின்ற மிக மோசமான எதிர்க் கட்சியாகவே எதிர்க்கட்சிகள் காணப்படுகின்றன. அவர்கள் எதிர்க்கட்சியாக எவ்வாறு செயற்பட வேண்டும் என தமிழரசுக் கட்சியின் முன்னுதாரத்தைப் பின்பற்ற வேண்டும் என்று நான் அவர்களை கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## மூத்த அதிகாரிகளின் படுகொலைகள் தொடர்ந்தால் தோல்வி நிச்சயம் என ஈரான் அதிபரின் மகன் எச்சரிக்கை!

ஈரானின் மூத்த அதிகாரிகளின் படுகொலைகள் தொடர்ந்தால் தோல்வி ஏற்படும் என ஈரான் அதிபரின் மகன் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஈரான் அதிபர் மசூத் பெஷெஷ்கியானின் மகன் யூசெஃப் பெஷெஷ்கியான், இஸ்ரேல் தனது மூத்த அதிகாரிகளைத் தொடர்ச்சியாகக் கொல்வதை அனுமதிக்குமானால், ஈரான் தோற்கடிக்கப்படும் என்று எச்சரித்துள்ளார். எதிரி மற்றொரு வெற்றிகரமான படுகொலையை நிகழ்த்த நாம் அனுமதித்திருக்கக் கூடாது என்று அவர் எழுதினார். அரசாங்க ஆலோசகராகப் பணியாற்றும் பெஷெஷ்கியன், இதுபோன்ற படுகொலைகளைத் தடுக்கத் தவறினால் தெஹ்ரான் தோல்வியைச் சந்திக்கும் என்று எச்சரித்தார். ஈரானின் உச்ச தலைவர் அலி கமேனி பிப்ரவரி 28 அன்று நடந்த வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார் . ஈரானின் முக்கிய பாதுகாப்புத் தலைவர் அலி லாரிஜானியை தங்கள் ராணுவம் நடத்திய தாக்குதலில் கொன்று விட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். லாரிஜானி கொல்லப்பட்டார் என்பதை ஈரான் உறுதிப்படுத்தியுள்ளது.



# நலிவுற்றோர் நலம் பேண கை கொடுப்போம் வாரீர்!




வங்கள் அபிமான ஈழநாடு eelanadu.ca பத்திரிகையின்

## 33 வது ஆண்டு விழா

தமிழகத்தின் முன்னணித் திரைப்படப் பாடகரும்
பிரபல கர்நாடக இசைக் கலைஞருமான
**சத்தியப்பிரகாஷ்**
இந்திய - கனேடிய பக்கவாத்தியக்
கலைஞர்களுடன் இணைந்து வழங்கும்

## ஏழிசைக் கீதங்கள்

(பாரதியார் பாடல்கள், தமிழிசைப் பாடல்கள், கர்நாடக இசை கலந்த திரைப்படப் பாடல்கள்)

Saturday
MARCH 21
2026
5:30PM

அன்பளிப்பு
VIP
$100 $50

சிறப்புச் சொற்பொழிவு: ஈழத்திலிருந்து வருகைதரும்
**தமிழருவி சிவகுமாரன்**
**தாயகத்து வேர்களும் கனடிய விழுதுகளும்**



ARMENIAN COMMUNITY CENTRE
50 HALLCROWN PLACE, TORONTO
(VICTORIAL PARK & CONSUMER ROAD)

விழா சரியாக 5.30 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும்.
தயவு செய்து நுழைவுச் சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும். நேரடி ஒளி-ஒலிபரப்புக்கு அனுமதி இல்லை.

AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
Ajith Sabaratnam
647.401.5800
647.594.9573
email:ajithsaba@gmail.com
10 THORNMOUNT DR SCARBOROUGH, ONTARIO M1B 3J4 Tel: 416.439.2800

Cash Point PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

Vijaya Jewellery
3341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5
+1 (437) 833-3197, (647) 329-3062
Email:yugan14@hotmail.com

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில் கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102 Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

கனகாம்பிகை அடகுமாடம்
தங்க நகைக் கடன் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படும்
தொடர்புகட்கு 416-754-7198
At Woodside Square Mall, 1571 SANDHURST CIRCLE #159D (Finch & McCowan) Scarborough, ON
2613 EGLINTON AVE, (Brimley & Eglinton) Toronto, ON

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax: 1-800-878-1348
39 Devonshire Avenue Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

RE/MAX Outstanding Agent for Outstanding Results.
Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com

PACELAW
Over 40 years of putting our clients first
Poorany Sornabala - BD Specialist
Desmond Sornabala - Paralegal
Call Us Today 647-968-7059
Get In Touch
191 The West Mall Suite 1100 Toronto ON, M9C 5K8
psornabala@pacelawfirm.com
www.pacelawfirm.com
Personal Injury
Corporate & Commercial
Immigration
Family Law
Real Estate
Wills and Estates
Employment Law
Civil Litigation
Criminal Defence Law
Business Facilitation Services

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
CALL: DHARMA, B.Com., Licenced Funeral Pre-Planner 647-713-6049

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% 2%
416-757-0034 • 416-994-3861
105A - 2425 Eglinton Ave. E, Scarborough. ammapawnbroker@gmail.com

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough
Mississauga Branch

N.K.S DRAPERY & BLINDS FABRIC
• Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies • Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha 416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:info@nksdrapery.com Web:www.nksdrapery.com

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment, 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info 647-289-6164

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge FUNERAL HOME CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6718
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

Chapel Ridge Funeral Home & Cremation Centre
Vilosan Sivathārman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

நந்தா NANTHA CATERS
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kipling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA 1 • 416 626 8421

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
1265 Morningside Ave, Suite 203 Toronto ON M1B 3V9
ANANTH Tharmalingam
Sales Representative
416.939.9525

Santha Panchalingam
சாந்தா பஞ்சலிங்கம்
Board of Director
பணிப்பாளர்
416-200-5470
santha@tamilcentre.ca
www.tamilcentre.ca

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn
www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com

# முன்னாள் ஜனாதிபதி கோட்டபாயவிடம் 21/2 மணி நேர வாக்குமூலம்! சுரேஷ் கலேயின் வாக்கு மூலத்தையடுத்தே அடுத்த கட்ட கைது?

இலஞ்ச ஊழல் ஒழப்பு ஆணைக்குழுவினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற விசேட விசாரணை ஒன்றில், வாக்குமூலத்தை பெறுவதற்காகவே கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் அரச உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் அதிகாரம் கொண்ட சுயாதீன நிறுவனமாக இலஞ்சம் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு பல வழக்குகளை விசாரணை செய்து வருகின்றது. அந்த வகையில், இடம் பெறுகின்ற விசாரணை தொடர்பான மேலதிக தகவல்களைச் சேகரிக்கும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய காலப்பகுதியில், கொழும்புக்கு அருகிலுள்ள வீடமைப்புத் தொகுதியொன்றில் பல வீடுகளைச் சட்டவிரோதமான முறையில் சிலருக்கு வழங்குவதற்குப் பரிந்துரை கடிதங்களை வழங்கியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர், கடந்த 12ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்தத் திகதியில் சிங்கப்பூருக்கான பயணமொன்றை மேற்கொண்டிருந்த காரணத்தினால், தம்மால் சமூகமளிக்க முடியாது என ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.



கோட்டாபய ராஜபக்ஷவின் அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஆணைக்குழு, விசாரணைக்கான இன்றையதினத்தினை ஒதுக்கியிருந்தது. குறித்த வீடமைப்புத் திட்டம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் பரிந்துரை கடிதங்கள் தொடர்பில்



தெளிவான வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே ஆணைக்குழு அதிகாரிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் உயர் பதவியில் இருந்த போது இடம் பெற்றதாகக் கூறப்படும் இந்த முறைகேடு தொடர்பான விசாரணைகள் தற்போது தீவிரப் படுத்தப் பட்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இல்லை. புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலே வழங்கும் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே அடுத்தகட்டக் கைதுகளும் விசாரணைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் 17 மார்ச் 2026 செவ்வாய்கிழமை இடம் பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எவரேனும் ஒருவரால் வெளிப்படுத்தப் படும் கருத்துக்கள் ஏதேனுமொரு விசாரணைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று பொலிஸாரால் இனங் காணப் பட்டால், அது தொடர்பில் பொலிஸாரால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது சுரேஸ் சலேவுக்காக குரல் கொடுப்பவர்கள், அவர்களுடன் நீண்ட நாட்களில் அரசியலில் ஈடுபட்ட மஹிந்தானந்த, நளின் பெர்னாண்டோ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்காக குரல் கொடுக்க முன்வரவில்லை.

விசாரணைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் போது அவர்களால் கூறப்படும் காரணிகள் குறித்த உண்மைகளும் வெளிப்படுத்தப்படும். எதிர்வரும் 27ஆம்திகதி உதய கம்மன்பில தொடர்பில் வழக்கொன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அன்று அவருக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படா விட்டால், 31ஆம் திகதி அவரால் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் குறித்த தகவல்களை வெளிப் படுத்த முடியும்.

சலே வழங்கும் வாக்குமூலத்தின் அடிப் படையிலேயே அடுத்த கைதுகள், விசாரணைகள் முன்னெடுக்கப்படும். அது குற்றப்புலனாய்வுப் பிரிவின் பணியாகும். இவற்றில் அரசாங்கத்தின் எவ்வித தலையீடுகளும் இல்லை என்றார்



# போர் வேண்டாம்! சுதந்திர பாலஸ்தீனம் வேண்டும்! ஒஸ்கார் விருது மேடையில் ஹொலிவூட் நடிகர் முழக்கம்!



ஹொலிவுட் நடிகர் ஜேவியர் பார்டெம் 15 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒஸ்கார் விருது விழாவில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும் போருக்கு எதிராகவும் குரல் கொடுத்த செய்தி சர்வதேச ரீதியில் வைரலாகி வருகின்றது.செய்தி தொகுப்பு

சிறந்த சர்வதேசத் திரைப்படத்திற்கான ஒஸ்கார் விருதை வழங்குவதற்காக மேடைக்கு வந்த ஜேவியர் பார்டெம், தனது உரையை ஆரம்பிக்கும் போதே போர் வேண்டாம் மற்றும் பாலஸ்தீனத்திற்கு விடுதலை வேண்டும்' என முழக்கமிட்டார்.

அவரது இந்தப் பேச்சு அங்கிருந்த பார்வையாளர்கள் மத்தியில் பலத்த கரகோஷத்தைப் பெற்றது. தனது டக்சிடோ உடையில் போருக்கு எதிரான சின்னம் மற்றும் பாலஸ்தீன ஆதரவுச் சின்னம் ஆகிய வற்றையும் அவர் அணிந்திருந்தார்.

மத்திய கிழக்கில் தற்போது தீவிரமடைந்துள்ள போர்ச் சூழலில், ஹொலிவுட்டின் முன்னணி நடிகர் ஒருவர் நேரடி ஒளிபரப்பின் போது இத்தகைய கருத்தை வெளியிட்டிருப்பது சர்வதேச அரங்கில் ஒரு முக்கியமான நகர்வாகப் பார்க்கப்படுகிறது.

# பலாலி விமான நிலையத்துக்காக ஒதுக்கப்பட்ட 1000 ஏக்கர் காணியில் விவசாயம் செய்யும் இராணுவம்!

பலாலி விமான நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள சுமார் 1000 ஏக்கர் காணிகளில் தற்போது இராணுவத்தினர் பயிர்ச் செய்கைகள் மேற்கொண்டு வருவதாகவும், மக்களுடைய காணிகளை அவர்களுக்கே மீண்டும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பலாலி விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்திற்கு, 1987 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கம் அனுமதி வழங்கியது. இதன்போது, அந்தப் பகுதியில் வாழ்ந்த மக்களின் காணிகளும் இராணுவத்தினர் கட்டுப்பாட்டுக்குள் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இதுவரை பலாலி விமான நிலையம் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவில்லை.

அதற்குப் பதிலாக இராணுவத்தினர் அங்கு களியாட்டங்கள் நிகழ்வுகள், ஹோட்டல் வசதிகள் மற்றும் பயிர்ச் செய்கைகள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



இத்தகைய பிரச்சினைகளுக்கு தற்போதைய அநுர அரசாங்கம் தீர்வு காணும் என்றும், மக்களின் காணிகளை விடுவித்து பலாலி விமான நிலையத்தை முறையாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஈரானை அமெரிக்கா குறைத்து மதிப்பிட்டதா? கனடிய இராணுவ நிபுணர் எச்சரிக்கை!



ஈரானின் இராணுவ வியூ கங்களை அமெரிக்கா முழுமையாகக் குறைத்து மதிப்பிட்டுள்ளதாக கனடிய இராணுவ ஆய்வாளரும், ஆப்கானிஸ்தானின் முன்னாள் நேட்டோ தளபதியுமான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் டேவிட் பிரேஸர் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேலிய போர் இரண்டு வாரங்களைக் கடந்துள்ளது.ஈரானின் தாக்குதல்களை முறியடிக்க அமெரிக்காவும் இஸ்ரேலும் பயன்படுத்தும் ஏவுகணைகள் அதிநவீனமானவை என்றாலும் அவை மிகவும் விலை உயர்ந்தவை என டேவிட் பிரேஸர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தற்போது ஒரு பொருளாதாரப் போராக மாறியுள்ளது. ஈரானின் வெறும் 60,000 டொலர் பெறுமதியான ட்ரோன் (Drone) ஒன்றைச் சுட்டு வீழ்த்துவதற்கு, அமெரிக்கா செலவிடும் ஏவுகணையின் விலை விகிதம் 163-க்கு 1 என்ற அளவில் உள்ளது.

இது பாதுகாப்பிற்குச் சிறந்தது என்றாலும், பொருளாதார ரீதியாக ஒரு திறமையான அணுகுமுறை அல்ல. அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய படைகள் ஈரானுக்குள் இதுவரை 15,000 இலக்குகளைத் தாக்கியுள்ளன.

ஈரான் பலவீனமடைந்திருந்தாலும், அவர்கள் இன்னும் தோற்கடிக்கப்படவில்லை என்றும், உக்ரைன் ரஷ்யாவை எதிர்கொள்வது போன்றதொரு நீண்ட கால வியூகத்தை ஈரான் கையில் எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது இவ்வாறிருக்க அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளின் போது ஈரான், அமெரிக்காவை ஒருபோதும் நம்பியதில்லை என்று அந்த நாட்டு வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் பகாய் தெரிவித்துள்ளார்.

அந்த நாட்டின் அரச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவின் குற்றங்கள் வரலாற்றில் ஒரு நீங்காத வடுவாக உள்ளது.

இருந்த போதிலும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட ஈரான் தயங்கியதில்லை இருப்பினும், இந்த பேச்சுவார்த்தைகள் அனைத்தும் ஈரானின் விழிப்புணர்வுடனும், எதிர் தரப்பு மீதான முழுமையான நம்பிக்கையற்ற தன்மையுடனும் மட்டுமே நடத்தப்பட்டதாக ஈரான் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# பாசாங்குத்தனத்தின் அதியுச்சம்

அயல் நாடுகளுக்கு எதிராக ஈரான் மேற்கொள்ளும் தாக்குதல்களை நிறுத்தக்கோரி ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் மார்ச் 11 வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலின் சார்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் பஹ்ரெய்ன் நாட்டினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை (2817) நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட நாடுகளின் இறைமையை மதித்து நடக்க வேண்டும் என்றும் ஐ.நா. சாசனத்தின் கோட்பாடுகளையும் சர்வதேச சட்டத்தையும் மீற வேண்டாம் என்றும் தீர்மானம் ஈரானைக் கேட்டிருக்கிறது.

ரஷ்யாவும் சீனாவும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத நிலையில், பாதுகாப்புச் சபையில் 13 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்தன. நிரந்தர உறுப்பு நாடுகள் இல்லாத பாகிஸ்தானும் சோமாலியாவும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலில் பக்கமாக நின்றன.

அதேவேளை, அந்த தீர்மானத்தை தொடர்ந்து மத்திய கிழக்கில் உடனடியாகப் போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி (எந்த நாட்டினதும் பெயரைக் குறிப்பிடாமல்) ரஷ்யாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தீர்மான வரைவு பாதுகாப்புச் சபை நிராகரித்திருக்கிறது.

அந்த வரைவை சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், சோமாலியா ஆகிய நாடுகள் ஆதரித்த அதேவேளை, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் உட்பட பாதுகாப்புச் சபையின் பல உறுப்பு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

குறிப்பாக அயல்நாடுகள் மீதான தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று ஈரானைக் கோரிய தீர்மானத்தைக் கொண்டு வந்த பஹ்ரெயினும் ரஷ்ய வரைவு மீதான வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

பஹ்ரெயின் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளையில் அதற்கு ஐ.நா.வின் 140 உறுப்பு நாடுகள் அனுசரணை வழங்கியிருந்தன. ஒரு நாட்டைப் பிரத்தியேகமாகக் குறிப்பிட்டு கொண்டு வரப்படுகின்ற தீர்மானங்களை அங்கீகரிப்பதில்லை என்ற கொள்கை உட்பட பல்வேறு காரணங்களைக் கூறி இலங்கை உட்பட பல நாடுகள் அதில் இணைந்து கொள்ளவில்லை.

ஆத்திர மூட்டப்படாத நிலையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிடமோ அல்லது அமெரிக்க காங்கிரஸிடமிருந்தோ அங்கீகாரத்தைப் பெறாமல் இஸ்ரேலுடன் சேர்ந்து ஈரானுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடுத்திருக்கும் ஆக்கிரமிப்புப் போர் உலகம் முழுவதையும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கும் நிலையில், பாதுகாப்புச் சபை அதைப் பற்றி கவலைப்படாமல் அயல்நாடுகள் மீதான ஈரானிய தாக்குதல்களுக்கு எதிராக மாத்திரம் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

சர்வதேச சட்டங்களைப் பற்றி தனக்கு எந்தக் கவலையும் கிடையாது என்றும் இரண்டாவது உலகப்போருக்கு பின்னர் உருவாக்கப்பட்ட சர்வதேச ஒழுங்கு (பிரதானமாக ஐக்கிய நாடுகள்) அமெரிக்காவுக்கு அநாவசியமான ஒரு சுமையாக இருப்பதாகவும் கூறி சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட உலக ஒழுங்கை நிர்மூலம் செய்து கொண்டிருக்கும் டொனால்ட் ட்ரம்பும் காசாவில் இனப் படுகொலைகளைச் செய்ததாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இஸ்ரேலிய பிரதமர் நெத்தன்யாகுவும் செய்துவரும்

சர்வதேச காடைத்தனம்தான் இனிவரும் உலக ஒழுங்கை தீர்மானிக்கப் போகின்றதா? மார்ச் 11 பஹ்ரெயின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையும் ரஷ்ய வரைவு நிராகரிக்கப்பட்டமையும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பாசாங்குத்தனத்தின் அதியுச்சமாகும்.

மத்திய கிழக்குப் போர் எப்போது முடிவடையும் என்று எவருக்கும் தெரியவில்லை. எதிர்பார்த்ததைப் போன்று விரைவான வெற்றியைப் பெற முடியாத நிலையில் ட்ரம்பும் நெத்தன்யாகுவும் ஈரானைக் குண்டு வீச்சுக்களால் நிர்மூலம் செய்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதை `அப்பட்டமான ஆக்கிரமிப்பு என்று அழைக்க உலகம் தயங்குவது மனித நாகரிகத்தையே கேள்விக்கு உள்ளாக்குகிறது.

# பிரிட்டனில் சதுரங்க ஜாம்பவான்களை வீழ்த்தி முதல் வரிசையில் இடம் பிடித்த தமிழ்ச் சிறுமி தாரா தமிழ்ச்செல்வன்

பிரித்தானியாவின் லெய்செஸ்டர் (Leicester) பகுதியைச் சேர்ந்த ஒன்பது வயது தமிழ் சிறுமி தாரா தமிழ்செல்வன், அந்நாட்டின் மிகவும் நம்பிக்கைக்குரிய இளம் சதுரங்கத் திறமையாளர்களில் ஒருவராக உருவெடுத்துள்ளார். லாக்பரோவில் உள்ள ஃபேர்ஃபீல்ட் பிரெப் பள்ளியில் ஐந்தாம் ஆண்டு பயிலும் தாரா, சமீபத்தில் நடைபெற்ற 2025–ஆம் ஆண்டிற்கான ‘யுகே ஓபன் பிளிட்ஸ்’ (UK Open Blitz Championships) சாம்பியன் ஷிப் போட்டியில் வெளிப்படுத்திய அதிரடி ஆட்டம் ஒட்டுமொத்த பிரித்தானியாவின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.




விறுவிறுப்பாக நடைபெறக் கூடிய இந்த வேகமான சதுரங்கப் போட்டியில், தனது பிராந்திய அளவிலான தகுதிச் சுற்றில் முதலிடம் பிடித்த தாரா, பிரித்தானியா முழுவதிலும் இருந்து வெறும் 16 வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்கும் தேசிய அளவிலான இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

அந்த இறுதிப் போட்டியில் பங்கேற்றவர்களிலேயே மிகவும் குறைந்த வயதுடையவர் தாரா என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு நாட்டின் முன்னணி பெண் சதுரங்க ஜாம்பவான்கள் மற்றும் ‘பிடே’ (FIDE) மாஸ்டர்களுடன் போட்டியிட்ட தாரா, ஒரு பெண் ‘பிடே மாஸ்டரை’ வீழ்த்தி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

தாராவின் இந்த அபரிமிதமான வளர்ச்சி குறித்து அவரது தாயார் ஷாலினி தமிழ்ச்செல்வன் கூறுகையில், தாரா. வுக்கு இது ஒரு சிறந்த அனுபவமாக அமைந்தது. இதன் மூலம் அவர் கற்றுக்கொண்ட பாடங்களும் பெற்ற தன்னம்பிக்கையும் வருங்காலப் போட்டிகளில் அவருக்குப் பெரும் உதவியாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

அதேபோல் தாராவின் பள்ளித் தலைமை ஆசிரியர் ஆண்ட்ரூ ஏர்ன்ஷா (Andrew Earnshaw), நாட்டின் வலிமையான வீராங்கனைகளுக்கு ஈடுகொடுத்து விளையாடும் தாராவின் நிதானத்தையும் மன உறுதியையும் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

மென் பொருள் பொறியாளர்களாகப் பணி புரியும் தனது பெற்றோருடன் நான்கு வயதிலேயே சதுரங்கம் விளையாடத் தொடங்கிய தாராவுக்கு, அந்த விளையாட்டின் காய்கள் ஒரு போர் வீரர்களைப் போலவே காட்சி அளித்துள்ளன.

குறிப்பாக ‘குதிரை’ காய் ‘L’ வடிவில் நகர்வது அவரை மிகவும் கவர்ந்துள்ளது. தனது இரண்டாம் வகுப்பிலேயே சதுரங்கக் கழகங்களில் இணைந்த அவர், தற்போது தன்னை விட வயதில் மூத்த பலருடன் போட்டியிட்டு வெற்றி பெற்று வருகிறார்.

என்னிடம் தோற்கும் போது பெரியவர்கள் ஒரு குழந்தையிடம் தோற்றுவிட்டோமே என்று சற்று வருத்தப்படுவார்கள். ஆனால் நான் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் எனது ஆட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறேன் என தாரா பிபிசி ஊடகத்திடம் நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார். சதுரங்கத்தை ஒரு ‘மன விளையாட்டு’ என்று வர்ணிக்கும் தாரா, வருங்காலத்தில் தனது வயதுப் பிரிவில் உலகின் சிறந்த சதுரங்க வீரராக வரவேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டுள்ளார். அதே நேரத்தில், அவர் ஒரு ‘மனநல மருத்துவராக’ வரவும் விரும்புகிறார்.

சதுரங்கப் போட்டியில் எதிராளி யின் அடுத்த நகர்வை முன்கூட்டியே என்னால் கணிக்க முடியும் என தனது விருப்பத்திற்கான சுவாரஸ்யமான காரணத்தையும் அவர் பகிர்ந்துள்ளார். புலம் பெயர் தமிழ் சமூகத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் தாரா தமிழ்செல்வனின் இந்தப் பயணம் தொடர்கிறது. வாழ்த்துக்கள்.

இது இவ்வாறிருக்க மாணவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டிய ஆசிரியர்களே, சமூக வலைதளங்களில் மிக மோசமான இனவாதக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட அதிர்ச்சிகரமான சம்பவம் டொராண்டோவில் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.இந்த இரு ஆசிரியர்களின் இழிவான செயலையடுத்து, அவர்கள் டொராண்டோ கத்தோலிக்க பாடசாலைச் சபையிலிருந்து உடனடியாகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நோர்த் யோர்க் பகுதியில் உள்ள ஜேம்ஸ் கார்டினல் மெக்கிகன் மேல் நிலைப் பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் அரங்கேறியுள்ளது. மாணவர்களும் அணுகக்கூடிய ஒரு சமூக வலைதளக் குழுவில் இந்த இரு ஆசிரியர்களும் கருப்பினத்தவர்களை மிகக் கேவலமாகச் சித்தரிக்கும் புகைப் படங்களையும், வார்த்தைகளையும் பகிர்ந்துள்ளனர்.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# ரில்வின் குறிப்பிடும் மாகாணசபை முறைமை மாகாணசபைத் தேர்தல் என்பதல்ல!

மாகாண சபைகள் அமைப்பு ஜே.வி.பி.யின் தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்தவைகளை முழுமையாக நிறைவேற்ற உதவவில்லையென்று குற்றஞ் சாட்டியுள்ள இதன்



செயலர் ரில்வின் சில்வா, இதற்கான மாற்றீட்டைத் தேடும்வரை மாகாண சபைகள் முறைமை அவ்வாறே இருக்குமென சுட்டியிருப்பது ஆளுனர்களின் நிர்வாகத்தையே தவிர தேர்தலுக்கான உறுதிமொழி அல்ல.

மாகாண சபைத் தேர்தல் விரைவில் இடம் பெறுமென்ற அதீத நம்பிக்கையில் அதனை நோக்கி வேகமாகப் பயணத்தை ஆரம்பித்த தமிழ்த் தேசிய கட்சிகள் எனப்படுபவர்கள் இப்போது ஏனோ ஒரு சோர்வு நிலையில் காணப்படுவது போல் தெரிகிறது.

தேர்தலை மையப்படுத்தியும், தலைமைக் கதிரையில் கண் வைத்தும் ஒற்றுமையை நோக்கி முன்னெடுத்த முயற்சிகள் பிசுபசுத்து விட்டது போல் தெரிகிறது. இப்போது இவர்களின் கவனத்தை மிக இலாவகமாக புதிய அரசியலமைப்பின் பக்கம் திருப்பி விட்டுள்ளது அநுர குமரவின் தேசிய மக்கள் அரசு.

இந்த அரசாட்சியை அநுர குமர என்ற ஜனாதிபதியின் தலைமையிலானது என்று சொன்னாலும், அநுர குமர மாகாண சபைத் தேர்தல்கள் பற்றி எப்போதும் உறுதியாகக் கூறிய.தாக இல்லை. கடந்த நவம்பரில் தம்மைச் சந்தித்த தமிழரசுக் கட்சியினரிடம் அனைவரும் ஏற்கும் அரசியல் தீர்வொன்று புதிய அரசியலமைப்பினூடாக மேற் கொள்ளப்படும் என்று கூறி, தமிழரசுக் கட்சியினரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

மாகாண சபைத் தேர்தலோ புதிய அரசியல் அமைப்போ எதுவாயினும் ஜனாதிபதி வழியாக அநுர குமரவினால் முடிவெடுக்க முடியாதவை என்பது தமிழரசுக் கட்சியினருக்கு மட்டுமன்றி அனைத்துத் தரப்பினருக்கும் தெரியும்.

அண்மைக் காலங்களில் சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் அழைப்பின் பேரில் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அங்கு சென்றிருந்தார். கொழும்பிலுள்ள சில வெளிநாடுகளின் தூதுவர்கள் ஜே.வி.பி.யின் தலைமை அலுவலகம் சென்று ரில்வின் சில்வாவுடன் உரையாடி வருகின்றனர். சில பிரதான ஊடகங்கள் இதனை செவ்வி கண்டு ஆட்சிபீடக் கொள்கைகளை விலாவாரியாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதன் மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாகவிருப்பது தேசிய மக்கள் சக்தி அரசும் அதன் ஜனாதிபதியும் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் - மொத்தத்தில் இந்த அணியிலுள்ள எவருமே ரில்வின் சில்வாவின் விரலசைவின்றி எதனையும் செயற்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர் என்பது.

அப்படியெனில் தமிழரசுக் கட்சியின் குழுவொன்று ரில்வின் சில்வாவை சந்தித்து இனப்பிரச்சனைக்கான தீர்வு, மாகாண சபைத் தேர்தல், புதிய அரசியலமைப்பு விடயங்களை பேசுவதற்கு ஏன் விரும்பவில்லையென்று தமிழரசின் உயர்மட்ட பிரமுகர் ஒருவரிடம் இப்பத்தியாளர் அண்மையில் கேட்டார். பதிலளித்த அவர், உண்மை தான். அதுபற்றி நாங்கள் யோசிக்கத் தான் வேண்டும். விரைவில் ஒரு முடிவெடுப்போம் என்று பட்டும்படாமலும் கூறினார். இது அவரது வழமையான பிடிபடாத பதில். இதற்கு மேல் எதுவும் சொல்லி அவரை சிக்கலில் மாட்ட நான் விரும்பவில்லை.

ஆனால், அடுத்த சில நாட்களில் ரில்வின் சில்வாவின் செவ்வி ஒன்று ஊடகங்களில் வெளியானது. இந்தச் செவ்விக்கு ஈழநாடு பத்திரிகையின் தலையங்கம் பின்வருமாறு இருந்தது: இனப்பிரச்சனைக்கு தீர்வு எட்டும்வரை மாகாண சபை முறைமை நீக்கப் படாது - ரில்வின் சில்வா திட்ட வட்டம், என்றிருந்தது இத்தலையங்கம்.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு நிலையான மாற்றுத் தீர்வை கண்டு பிடிக்கும் வரை மாகாண சபை முறைமை நீக்கப்படாது என்று மிக விளக்கமாக அவர் இங்கு தெரிவித்திருந்தார். தொடர்ந்து இதுபற்றிக் குறிப்பிடுகையில் இனப்பிரச்சனைக்கு சரியான தீர்வை உருவாக்க வேண்டுமென்ற எமது தேர்தல் அறிக்கையில் உறுதியளித்த நோக்கத்தை மாகாண சபைகள் நிறைவேற்ற உதவவில்லையென்று ஒரு குற்றச்சாட்டை இங்கே சுட்டியிருந்தார்.

ரில்வின் சில்வா அத்துடன் நிறுத்தவில்லை - எதுவாயினும் ஒரு சிறந்த மாற்றுத் தீர்வை தேடும் வரை மாகாண சபைகள் அவ்வாறே இருக்கும். அதனை எட்டாமல் மாகாண சபையை நாம் அகற்றப் போவதில்லையென்று மிகவம் விளப்பமாகவும் இங்கு தெரிவித்திருந்தார்.

முக்கியமான மூன்று விடயங்களை மிகவும் இலகுவான நடையில் எவரும் இலகுவாகப் புரியுமாறு ரில்வின் தெரிவித்திருந்ததை கவனிக்க வேண்டும்.

முதலாவது இனப்பிரச்சனைக்கு நிலையான ஒரு மாற்றுத்தீர்வை கண்டு பிடிக்கும் வரை மாகாண சபை முறைமை (கவனிக்கவும் முறைமை) நீக்கப்படாது என்பது. (அப்படியானால், 1987 ராஜிவ்-ஜே.ஆர். ஒப்பந்தத்தில் உருவான மாகாண சபை இனப்பிரச்சனைத் தீர்வுக்காக கொண்டு வரப்பட்டது என்பதை ஜே.வி.பி. ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்தது என்பதும் இதற்கு மாற்றுத் தீர்வு காணப்பட வேண்டுமென்று ஜே.வி.பி. தொடர்ந்தும் விரும்புகிறது என்பதும் இங்கு புலனாகிறது)

இரண்டாவது: தற்போதுள்ள மாகாண சபை முறைமை இனப்பிரச்சனைக்கு சரியான ஒரு தீர்வை உருவாக்க வேண்டுமென்ற ஜே.வி.பி.யின் தேர்தல் அறிக்கையை நிறைவேற்ற உதவவில்லையென்று கூறியுள்ளார். (கடந்த ஒன்றேகால் வருடங்களாக மாகாண சபை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேர்தல் கால அறிக்கைகளை நிறைவேற்ற உதவவில்லையென்பதே இந்தக் குற்றச்சாட்டு. அப்படியானால் மாகாண சபைகள் இருப்பதில் என்ன பயன் என்று ரில்வின் சில்வா கேட்பது புரிகிறது).

மூன்றாவது: ஒரு சிறந்த மாற்றுத் தீர்வை இதற்குத் தேடும்வரை மாகாண சபைகள் அவ்வாறே இருக்கும் என மிக அழுத்தம் திருத்தமாக ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். அதாவது மாற்றுத் தீர்வில் மாகாண சபைகள் இருக்காது என்பது இதனூடாக வெளிப்படையாக புலப்படும் தகவல். (இதுதான் இந்தச் செவ்வியில் அவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் முத்தாரம் எனலாம்).

இதனைச் சற்று ஆழமாகப் பார்க்கின் 1987 ஒப்பந்த காலத்திலிருந்து விரிந்து செல்ல வேண்டிய பலவற்றை வரிவரியாகக் கூற வேண்டும். ஆனால் அதற்கு இந்தப் பத்தி போதாது. எனினும், சிலவற்றை தொட்டுச் சென்றால் அவற்றை உள்நோக்கலாம்.



1987 ராஜிவ்-ஜே.ஆர். ஒப்பந்தத்தை வீராவேசமாக எதிர்த்து களமாடியவர்கள் ஜே.வி.பி.யினர். 1989வரை நீண்டு இத்தொடரில் இடம் பெற்ற வன்செயல்கள், தீ வைப்புகள், படுகொலைகள் தனி வரலாற்றைக் கொண்டவை. இரு நாடுகளின் ஒப்பந்தத்தை எதிர்த்தது என்பது அதில் பிரசவமான மாகாண சபை முறைமையை ஜே.வி.பி. முழுமையாக வெறுத்தது என்பதாகும். ஆக ஜே.வி.பியினர் ஆரம்பத்திலிருந்து மாகாண சபையை எதிர்த்து வந்தனர் என்பது வெளிப்படையானது.

மகிந்த ராஜபக்ச ஆட்சியின் போது அவர்களது அநுசரணையோடு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அதனூடாக வடக்கு-கிழக்கு மாகாண சபைகள் ஒன்றாக இயங்க முடியாது தடை செய்தவர்களும் இவர்களே. எந்த வகையிலும் மாகாண சபைகள் இயங்கக் கூடாதென்பதை தங்கள் அடிப்படைக் கொள்கையாகவே ஜே.வி.பி. செயற்படுத்தி வந்ததென்பது பழங்கதையல்ல.

இவைகளினூடாக அறிந்து புரிந்து தெரிந்து கொள்ளக்கூடியதாகவிருப்பது, தேசிய மக்கள் சக்தி அரசின் தாயாகவும் தந்தையாகவும் விளங்கும் ஜே.வி.பி.யின் செயற்திட்டங்களில் மாகாண சபை என்பது வேண்டப்படாத ஒரு பிள்ளை. இது கருவுற்றபோதே அதனை கருக்கலைப்பு செய்ய 1987ல் இவர்கள் முயன்றனர். ஆனால், அப்போது அது சாத்தியமாகவில்லை. இப்போது அரச இயந்திரத்தை தேர்தல் வழியாக கையேற்று ஜனநாயக வழியாக மாகாண சபையை இல்லாமல் செய்வதே இவர்களது இலக்காக உள்ளது.

இவ்வாறு கூறுவதற்கு முக்கிய சான்றாக இருப்பது ரில்வின் சில்வாவின் கூற்றுகள். அதாவது, இனப்பிரச்சனை தீர்வு எட்டும் வரை மாகாண சபை முறைமை நீக்கப்படாது என்ற

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

இவரது அறிவிப்பில் முறைமை என்ற சொல் சற்றுக் கவனிக்கப்பட வேண்டியது. இன்னும் ஆழமாக இச்சொற்பதத்தை ஆய்ந்து பார்க்கையில் மாகாண சபை தேர்தல் நீக்கப் படாது என்று அவர் கூறவில்லையென்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

மாகாண சபை முறைமை என்பது வேறு, மாகாண சபை தேர்தல் என்பது வேறு. தற்போது ஆளுனர்கள் நிர்வாகத்தில் அவைகள் இயங்குவதே மாகாண சபை முறைமை என்பது. மாகாண சபைகளுக்கு மாற்றுத் தீர்வு காணப்படும் வரை (அதாவது இல்லாமற் செய்யப்படும்வரை) தற்போதுள்ள ஆளுனர் ஆட்சியின் கீழ் மாகாண சபை முறைமை தொடர்ந்து இயங்கும் என்பதையே அந்த முறைமை மாற்றப்படாமு என்று ரில்வின் சில்வா கூறியுள்ளார். மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமென்று ரில்வின் சில்வா எங்கும் கூறியதாக இல்லை.

இவர் கூறும் முறைமை என்ற சொல்லின் மறைபொருள் என்ன என்பதை புரியாதவர்கள் மாகாண சபைகளுக்கு விரைவில் தேர்தல் நடைபெறப்போவதாக எண்ணி, முறைமையையும் தேர்தலையும் ஒன்றாக்கி தேர்தலுக்கு கட்டியம் கூற ஆரம்பித்துள்ளார்கள். இது அரசியல் அறியாமையா, அப்பாவி மக்களை ஏமாற்றும் அரசியல் சுத்துமாத்தா?

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


14 மார்ச் 2026 முதல் 20 மார்ச் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு எட்வேட் செல்வதாஸ் (தாஸ்)

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் ஒட்டவா- கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த கனடா பாராளுமன்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு எட்வேட் செல்வதாஸ் அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாள் 16 மார்ச் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு எட்வேட் செல்வதாஸ் (தாஸ்) அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவுநாள் 20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் செஞ்சோலை இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடுவாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம்

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு குலசேகரம்பிள்ளை இராம லிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம்

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களுடைய எட்டாவது ஆண்டு நினைவு நாள் 19 மார்ச் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 38வது ஆண்டு நினைவஞ்சலி



### சங்கீதபூஷணம் இசை ஆசிரியர்
### திரு நாகலிங்கம் சண்முகலிங்கம்

புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம், இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 38வது ஆண்டு நினைவு நாள் 07 மார்ச் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



04 மார்ச் 2026 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



04 மார்ச் 2026 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



05 மார்ச் 2026 வியாழக்கிழமை வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




06 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி துரைச்சாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



07 மார்ச் 2026 சனிக்கிழமை புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம் - இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 38வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



08 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி சியாமி சிவா அவர்களின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சியாமி சிவா அவர்கள் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



08 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளுன் செல்வப்புதல்வி ஸ்ரீதேவி ஸ்ரீகுமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஸ்ரீதேவி தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



16 மார்ச் 2026 திங்கட்கிழமை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஒட்டவா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த கனடா பாராளுமன்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு எட்வேட் செல்வதாஸ் (தாஸ்) அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



19 மார்ச் 2026 வியாழக்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசபிள்ளை தெய்வானைப்பிள்ளை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதிஇல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# அரசியல் தலைவர்களுக்கு குடும்ப ஒழுக்கம் முக்கியம்! விஜய்யை மறைமுகமாகச் சாடிய வை.கோ!




கற்பையும், மானத்தையும் உயிரியினும் பெரிதாகக் முன்னிறுத்தி வாழும் தமிழ்நாட்டில் எப்படியும் வாழ்க்கை நடத்துவேன். யாரோடும் மேடைக்கு வந்து நிற்பேன் என சொல்லும் அபாயம் நேர்ந்திருக்கிறது. அரசியல் தலைவர்களுக்கு குடும்ப ஒழுக்கம் முக்கியமானது என தவெக தலைவர் விஜய்யை மதிமுக பொதுச் செயலாளர் வைகோ மறைமுகமாக சாடினார்.

படித்துவிட்டு வளைகுடா நாடுகளுக்கு சென்று அங்கே கிடைக்கும் ஊதியத்தை பெற்றோருக்கு அனுப்பும் லட்சக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலமும் கேள்வி குறியாக உள்ளது. அவர்கள் உயிரோடு திரும்ப முடியுமா என்ற அதிர்ச்சி, அச்சத்தில் உயிரை கையில் பிடித்துக் கொண்டுள்ளனர்.

இவ்வளவு மனத்துயரத்துக்கும் காரணம் அமெரிக்க வெள்ளை மாளிகைக்குள்ளே நுழைந்து அதிபர் நாற்காலியிலே ஹிட்லரின் மறு உருவமாக உட்கார்ந்துள்ள டொனால்டு ட்ரம்ப். அமெரிக்க நாட்டின் ஜனநாயகவாதிகள் ஒன்று சேர்ந்து அவர் மீது தலை குற்றச்சாட்டு (இம்பீஸ்மென்ட்)கொண்டு வந்து பதவியில் இருந்து நீக்கவேண்டும்.

1984ல் ஈழத் தமிழர் மாநாடுக்கு சென்றிருந்தேன். அந்நாட்டின் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் பேசும் போது, 'பெயரை சொல்லி நான் ஒரு ஒழுங்கான குடும்பம் நடத்துகிறேன். எனக்கு ஒரு மனைவி ,மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். கட்டுக்கோப்பான இல்லறத்தை நடத்துகிறேன். என்னை தேர்தலில் வெற்றி பெற செய்யுங்கள்' என்றனர். இந்நாட்டில் யாரும், யாரோடும் கைகோர்க்கலாம்யாரும் யாரையும் காதலிக்கலாம். பந்தங்களே கிடையாது.

இஷ்டத்துக்கு வாழலாம் என்ற அமெரிக்காவில் கூட எம்பியாக, ஆளுநராக , குடியரசுத் தலைவராக போட்டியிட அடிப்படை தகுதி இருக்கிறது. கற்பையும், மானத்தையும் உயிரியினும் பெரிதாகக் முன்னிறுத்தி வாழும் தமிழ்நாட்டில் எப்படியும் வாழ்க்கை நடத்துவேன். யாரோடும் செல்வேன். யாரோடும் கரம் கோர்பேன். யாரோடும் மேடைக்கு வந்து நிற்பேன் என சொல்லும் அபாயம் நேர்ந்திருக்கிறது.

அரசியல் தலைவர்களுக்கு குடும்ப ஒழுக்கம் முக்கியமானது. தமிழகத்தின் மானம், மரியாதை பெருமை, உரிமைகளை காக்க வேண்டும். தவறான முடிவை செய்து விடாதீர்கள். தமிழகம் நாசமாக போய்விடும். இவ்வாறு பேசினார்.

## தனது அரசியல் எதிர்காலத்தை விஜய் சூனியமாக்கி கொள்ளமாட்டார்



தே.ஜ. கூட்டணியில் சேர விஜய் இணங்க மாட்டார். தனது அரசியல் எதிர்காலத்தை சூனியமாக்கிக் கொள்ள மாட்டார் என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விசிக தலைவர் திருமாவளவன் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது பாஜக, விஜய்யை தங்கள் கூட்டணியில் இணைக்க முயற்சிப்பதாக செய்திகள் வருகின்றன. விஜய்க்கு அழுத்தம் கொடுத்து அடிபணிய வைக்க முயற்சிகள் நடப்பதாக செய்திகள் வருகின்றன. நண்பர் விஜய் பாஜகவுக்கு அடிபணிந்தால் அவருடைய அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும்.

அது அவருக்கும் தெரியும், பிற மாநிலங்களில் பாஜக, சங் பரிவார் நயவஞ்சகமாக கூட்டணி கட்சிகளை வளைப்பது, போன்ற யுக்தியை கையாள்வர். அதை தமிழகத்திலும் செய்ய பார்க்கின்றனர். நண்பர் விஜய் அதற்கு இணங்க மாட்டார். தனது எதிர்காலத்தை சூனியமாக்கி கொள்ள மாட்டார் என நான் நம்புகிறேன்.

இடதுசாரிகள் கூடுதல் தொகுதிகள் கேட்பதாக கூறுகிறீர்கள், கூட்டணி பேச்சுவார்த்தையின்போது கூட்டணி கட்சிகள் இடையே மாறுபட்ட, முரண்பட்ட கருத்துகள் வருவது இயல்புதான். ஆனாலும் இறுதியில் சுமூக தீர்வு காண்போம். இந்த கருத்துக்களால் கூட்டணியில் எந்த பாதிப்பும் ஏற்படாது. விடுதலை சிறுத்தைகள் கட்சி எத்தனை தொகுதிகளில் போட்டியிடும் என இரண்டொரு நாளில் தெரிந்து விடும்.இவ்வாறு அவர் கூறினார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ஊசலாடும் வெளியுறவுக் கொள்கை

அமெரிக்க நீர்மூழ்கியினால், ஈரானின் ஐ.ஆர்.ஐ.எஸ். டெனா போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம், இலங்கையின் இறைமைக்கு மாத்திரமல்ல, வெளியுறவுக் கொள்கைக்கும் கூட சவாலானதாக மாறியிருக்கிறது.

கென்டக்கி மாநிலத்தில் நடந்த அரசியல் பேரணி ஒன்றில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இலங்கைக்கு அப்பால் ஈரானிய நீர் மூழ்கிக் கப்பலை ஏன் மூழ்கடித்தீர்கள் என தான், தனது இராணுவ ஜெனரல்களிடம் கேள்வி எழுப்பியதாக குறிப்பிட்டிருந்தார்.



அதனை ஏன் தாக்கி மூழ்கடித்தீர்கள் அவர்களைப் பிடித்து பயன்படுத்தி இருக்கலாமே என்று கேட்ட போது ஜெனரல் ஒருவர், மூழ்கடிப்பதே நல்லது என்றும், அது மிகவும் விளையாட்டாக (fun) இருந்தது என்றும் தெரிவித்தார் என ட்ரம்ப் கூறியிருக்கிறார்.

ஈரான் விவகாரத்தில் ட்ரம்பின் செயல்பாடுகள் சர்வதேச அளவில் கடும் விமர்சனங்களையும் கண்டனங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த விவகாரத்தில் மட்டுமல்ல, பல நாடுகளுடன் அவர் முரண்படுவதும், அதுசார்ந்து எடுக்கின்ற நடவடிக்கைகளும் வெறுப்பையும் கோபத்தையும் தூண்டி வருகின்றனு. ஆனாலும், ஈரானிய போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விவகாரத்தில் ட்ரம்ப் எழுப்பிய கேள்விக்குள் ஒரு நியாயம் இருந்தது.

ஏனென்றால், மூழ்கடிக்கப்பட்டது ஈரானின் போர்க்கப்பலாகவே இருந்தாலும், அந்த தருணத்தில் அது ஆயுதம் ஏந்தியிருக்கவில்லை. ஏனென்றால் விசாகப்பட்டினத்தில் நடந்த சர்வதேச கடற்படை மீளாய்வு அணிவகுப்பில் பங்கேற்பதற்காக அது அழைக்கப்பட்டிருந்தது.

அரசாங்க உயர்தலைவர்கள் பங்கேற்கும் இவ்வாறான நிகழ்வில், ஆயுதங்களைக் கொண்டிருக்க முடியாது. விசாகப்பட்டினத்தில் நடந்த கடற்படை மீளாய்வை இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு பார்வையிட்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டிருந்தார். எனவே, ஈரானிய கப்பலில் ஏவுகணைகளோ அல்லது ஆபத்தான ஆயுதங்களோ இருந்திருக்க முடியாது. ஆயுதங்களின்றி இருந்த கப்பல் தான் மூழ்கடிக்கப்பட்டது. நிராயுதபாணியான கப்பலை தாக்கியது, அமெரிக்க கடற்படைக்கு ஒரு களங்கம்.

இது குறித்த குற்றச்சாட்டுகளை ஈரான் முன்வைத்த போது, அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடம் அதனை மறுத்திருந்தது. போரில் எந்தவொரு இராணுவ இலக்கையும், சட்டபூர்வமாக இலக்கு வைக்க முடியும் என்று அது நியாயப்படுத்தியது.

ட்ரம்புக்கு இந்த விடயத்தில் உடன்பாடு இல்லாமல் இருக்கலாம் என்பதையே, இராணுவ அதிகாரிகளிடம் அவர் எழுப்பிய கேள்வி உணர்த்துகிறது. ஈரானுடன் போர் புரிந்து கொண்டே, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அதன் போர்க்கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்ட விடயத்தில், உடன்பாடற்ற கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால், இலங்கைக்கு அருகே நிகழ்ந்த இந்த சம்பவத்தில், தனக்கு உடன்பாடு இல்லை என்பதை இலங்கை அரசாங்கத்தினால் எடுத்துக்கூற முடியவில்லை.

இலங்கையின் சர்வதேச கடல் எல்லைக்கு வெளியே இது இடம் பெற்றிருந்தாலும் – இலங்கையின் பொருளாதாரக் கடல் எல்லைக்குள்ளேயே இது நடந்திருக்கிறது. இதில் பிற நாடுகள் இரண்டு சம்பந்தப்பட்டுள்ளன.

இந்தியப் பெருங்கடலை அமைதி வலயமாக மாற்றும் முயற்சிகளை 1960களிலேயே ஆரம்பித்த நாடு இலங்கை.

வல்லரசுகளின் இராணுவப் போட்டியைத் தவிர்த்து, பிராந்திய பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ள, அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இந்த யோசனையை ஐ.நாவில் முன்மொழிந்திருந்தார். இந்த யோசனை, 1971ஆம் ஆண்டு ஐ.நா. சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. எனவே, அதனை மீறி, ஈரானிய போர்க்கப்பல் இந்தியப் பெருங்கடலில் அமெரிக்காவினால் தாக்கப்பட்டது அதுவும் இலங்கையின் பொருளாதாரக் கடல் எல்லைக்குள் நிகழ்ந்திருப்பது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.



இது தவிர, 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர், இவ்வாறான ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. அதாவது ஒரு நாட்டின் பொருளாதாரக் கடல் எல்லைக்குள், இன்னொரு நாட்டின் கப்பல் மூன்றாவது நாடு ஒன்றின் நீர்மூழ்கியினால் தாக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் உலகப் போருக்கு பின்னர், அமெரிக்காவினால் இவ்வாறான ஒரு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. அதை விட அமெரிக்க கடற்படை, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், முதல் முறையாக டோர்பிடோவை பயன்படுத்தி, இன்னொரு நாட்டின் போர்க்கப்பலை மூழ்கடித்திருக்கிறது. இது சாதாரண விடயம் அல்ல.

இது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு போர்க் குற்றம் என ஈரான் மாத்திரம் குற்றம்சாட்டவில்லை, இலங்கையின் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பலரும் குற்றம்சாட்டுகிறார்கள். ஆனால், இராஜதந்திர மொழிகளில் இதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய இலங்கை அரசாங்கம், அதனை செய்யவில்லை.

அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் இந்த விடயத்தில் மென்போக்கை கடைபிடிக்கிறது. அது அமெரிக்காவுடனான உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதே தவிர, நடுநிலையாக செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு மேலோங்கியிருக்கிறது. அரசியல் மற்றும் பாதுகாப்புத் துறை சார் வல்லுனர்கள் இந்த விவகாரத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்ள வில்லை.

அவர்கள் அரசாங்கம் நடுநிலைக் கொள்கையை அணிசேரா கொள்கையை மிகத் தெளிவாக மீறுகிறது என்று சுட்டிக்காட்டுகிறார்கள், குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் அதைப்ப ற்றி எல்லாம் கவலைப்படுகின்ற நிலையில், அந்தக் கருத்துக்களை செவிமடுக்கின்ற நிலையில் அரசாங்கம் இல்லை என்பது உண்மை.

இந்த விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. இந்த தாக்குதல் நடப்பதற்கு முன்னரே, அது பற்றி இலங்கை அறிந்திருந்தது என்றும், இலங்கை கொடுத்த தகவலை அடுத்தே அமெரிக்க கடற்படை தாக்கியது என்றும் கூட தகவல்கள் வெளியாகின.

இந்த தாக்குதல் நடந்த விதம் பல்வேறு சந்தேகங்களை எழுப்பினாலும், அரசாங்கம் அதனை மறுத்திருக்கிறது.

இலங்கைக்கு தகவல் வழங்கப்பட்டிருப்பதற்குச் சாத்தியம் இல்லை என்றும் அவ்வாறு ஒரு நாடு மற்றொரு நாட்டின் கப்பலை தாக்குவதற்கு முன்னர், இன்னொரு நாட்டுக்கு தகவல் கொடுக்கும் என்று தான் நினைக்கவில்லை என்றும், அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியிருந்தார். அது ஏற்புடைய கருத்துத் தான்.

தாக்குதல் நடத்திய அமெரிக்க நீர்மூழ்கியில் மூன்று அவுஸ்ரேலிய கடற்படையினர் பயிற்சிக்காக தங்கியிருந்தனர். தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர், அவர்கள் மூவரையும், அமெரிக்க அதிகாரிகள் உறங்கும் அறைக்குச் செல்லுமாறு கூறியிருக்கிறார்கள். அதன் பின்னரே அந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. எனவே, இலங்கைக்குத் தெரியப்படுத்தி விட்டு இந்த தாக்குதல் நடந்திருக்கும் என்ற வாதங்கள் வலுவானவையல்ல.

அதேவேளை, இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இருக்கின்ற நெருங்கிய நட்புறவும் பாதுகாப்பு உறவுகளும் இரகசியமானவை.

இரண்டு நாடுகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு எந்தளவுக்கு வலிமையானது என்பதில் வெளிப்படையற்ற நிலையே காணப்படுகிறது. அந்த உடன்பாடு இன்னமும் இரகசியமாகவே இருக்கின்ற நிலையில், இவ்வாறான சந்தேகங்கள் எழுவது இயல்பு தான்.

இப்போதைய நிலையில் இலங்கை தனது வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாக பெருமைப்பட்டுக் கொள்ள முடியாத நிலையே உள்ளது. ஒரு காலத்தில் இலங்கை அணிசேரா நாடுகளின் அமைப்பில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாடாக இருந்தது.

ஜவஹர்லால் நேரு, மார்ஷல் டிட்டோ, அப்துல் நாசர், சுகார்னோ, நக்ருமா போன்ற அன்றைய உலகத் தலைவர்களுடன் இணைந்து, அணிசேரா கொள்கையை உருவாக்குவதில், அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க முக்கிய பங்கு வகித்திருந்தார். அது ஒரு வலிமையான கொள்கையாக அமைப்பாக காணப்பட்டது. ஆனால், சமீப காலத்தில் அது தொய்வடைந்து போயிருக்கிறது. அதற்கு இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் அமெரிக்க சார்பு நிலையை எடுத்ததும் ஒரு காரணம்.

இப்போது, இந்த இரண்டு நாடுகளும் வாய் திறந்து பேச முடியாத நிலையில் இருக்கின்றன. ஈரான் மீதான தாக்குதலை நடுநிலைப் போக்குடன் அணுகக் கூடிய நிலையில் இந்த நாடுகள் இல்லை என்பது தெளிவாகி விட்டது.

**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



ஈரானிய போர்க்கப்பல், இலங்கையின் பொருளாதார எல்லைக்குள் இந்தியாவின் பார்வைக்கு எட்டிய தொலைவிற்குள், இந்தியக் பெருங்கடலுக்குள் மூழ்கடிக்கப்படுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

இந்த இரண்டு நாடுகளும் இது பற்றி அக்கறை கொள்ளாது என்ற நம்பிக்கையில் தான், அமெரிக்க ஜெனரல்கள் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள். இந்த விடயத்தில் அமெரிக்க அரசியல் அதிகார மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பதை, ட்ரம்பின் கென்டக்கி உரை எடுத்துக் காட்டுகிறது.

இந்தளவுக்கு இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள், இறுக்கமடைந்திருக்கின்றன. இது சாதாரண விடயம் அல்ல. கடந்த வாரம் கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இது ஓர் ஆபத்தான சூழல் என சுட்டிக்காட்டியிருந்தார். இந்திய சீன போர் நடந்த போது பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டார நாயக்க, இரண்டு நாடுகளுக்கும் தூது வர்களை அனுப்பி, அதை நடுநிலை யுடன் கையாண்ட விதத்தை சுட்டிக் காட்டி, தற்போதைய அரசாங்கத்தை விமர்சித்திருக்கிறார்.

தற்போதைய அரசாங்கத்தின், வெளியுறவு கொள்கை சிறந்ததா இல்லையா என்ற கேள்வியே இப்போது இல்லை, எந்தவொரு தெளிவான வெளியுறவுக் கொள்கையும் இல்லாமல், காற்றில் அங்கும் இங்குமாக அடித்துச் செல்லப்படும் ஒன்றாகவே அது உள்ளது.

கசப்பாக உண்மை என்னவென்றால், இலங்கைக்கு வெளியுறவு கொள்கை என்று ஒன்றே கிடையாது என்றும் அவர் விசனத்துடன் கூறியிருக்கிறார். இது உன்னிப்பாக நோக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் தான், இத்தகைய நிலை இன்னும் மோசமடைந்திருக்கிறது. அமெரிக்க சார்பு நிலைக்குள் அரசாங்கம் சிக்கிக் கொண்டதன் விளைவு இது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமெரிக்காவை வைத்து தன்னை காப்பாற்றிக் கொள்ளலாம் என்று யோசிக்கிறதே தவிர, நாட்டைப் பற்றிச் சிந்திக்கவில்லை. சுய அரசியல் நலனை மையப்படுத்தி அது எடுத்திருக்கும் தீர்மானம், சர்வதேச அரங்கில் அது ஓரம் கட்டப்படும் நிலையை உருவாக்கும்.

எல்லா சந்தர்ப்பங்களிலும் அமெரிக்கா காப்பாற்றும் என குருட்டுத்தனமாக நம்புகின்ற நிலைக்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் வந்திருப்பது, அவர்கள் எந்தளவுக்கு அதற்கு அடிமைப்படும் நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

# ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க உதவாவிடின் நேட்டோ அமைப்பு மிக மோசமான எதிர்காலத்தைச் சந்திக்கும்!



இரானுடன் அமெரிக்காவும் இஸ்ரேலும் மோதிக் கொண்டிருக்கும் சூழலில், ஹோர்முஸ் நீரிணை டொனால்ட் டிரம்புக்கு சிக்கலாக மாறியுள்ளது. போர்க்கப்பல்களை அனுப்புமாறு அவர் வேண்டுகோள் விடுத்த போதிலும், ஐரோப்பாவும் பிற நாடுகளும் இதுவரை அதிக அக்கறை காட்டவில்லை. இதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை, டிரம்ப் ஐரோப்பிய நாடுகளை எச்சரித்தார்.

ஹோர்முஸ் நீரிணையைத் திறக்க அவர்கள் உதவாவிட்டால் அது நேட்டோ அமைப்பின் எதிர்காலத்திற்கு 'மிகவும் மோசமானதாக' அமையும் என்று அவர் கூறினார்.

பினான்சியல் டைம்ஸ் இதழுக்கு அளித்த பேட்டியிலும், புளோரிடாவிலிருந்து வாஷிங்டனுக்கு ஏர் ஃபோர்ஸ் ஒன் விமானத்தில் திரும்பும் போது செய்தியாளர்களிடம் பேசிய போதும் அவர் இதனை மீண்டும் வலியுறுத்தினார். இந்த மாதம் சீனாவில் சீன அதிபருடன் நடைபெறவுள்ள சந்திப்பிற்கு முன்னதாக, ஹோர்முஸ் நீரிணையைத் திறக்க சீனா உதவும் என்று டிரம்ப் நம்பிக்கை தெரிவித்தார். சீனா தனது எண்ணெய் பயன்பாட்டில் '90 சதவீதத்தை இந்த நீரிணை வழியாகவே பெறுகிறது' என்று அவர் கூறினார்.

ஆனால் அதற்கு முன்பே சீனா சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று டிரம்ப் கூறினார். ஏனெனில் இந்தச் சந்திப்பு இன்னும் இரண்டு வாரங்களுக்குப் பிறகுதான் நடைபெறவுள்ளது, இது 'நீண்ட காலம்' என்று அவர் குறிப்பிட்டார். தனது சீனப் பயணம் ஒத்திவைக்கப்படலாம் என்றும் அவர் கூறினார், இருப்பினும் இது குறித்து மேலதிக தெளிவான தகவல்கள் எதையும் அவர் வழங்கவில்லை.

ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பதற்கான 'பொதுவான முயற்சியில்' இணையுமாறு சீனா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜப்பான், தென் கொரியா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்த மறுநாளே டிரம்ப் இவ்வாறு கூறியுள்ளார்.

### நாடுகள் கூறியது என்ன?

டிரம்பின் கருத்துக்கு சில நாடுகள் எதிர்வினையாற்றியுள்ளன.

பிரிட்டனில் செய்தியாளர்களைச் சந்தித்த பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர் சந்தைகளில் நிலைத்தன்மை இருக்க வேண்டும் என்பதற்காக ஹோர்முஸ் நீரிணை மீண்டும் திறக்கப்பட வேண்டும். அது எளிதான வேலை அல்ல. அந்தப் பகுதியில் கப்பல்கள் சுதந்திரமாகச் செல்லும் நிலையை மீண்டும் உருவாக்குவதற்கான ஒரு திட்டத்தைக் கொண்டு



வர பிரிட்டன் அதன் கூட்டாளி நாடுகளுடன் சேர்ந்து பணியாற்றி வருகிறது என்றார்.

**சீனா:-**வாஷிங்டனில் உள்ள சீனத் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் சிஎன்என் - இடம் கூறுகையில், மோதலை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருமாறு சீனா அழைப்பு விடுப்பதாகத் தெரிவித்தார்.

டிரம்பின் கோரிக்கையைச் சீனா ஏற்குமா என்பதை அவர் குறிப்பிடவில்லை என்றாலும், நிலையான மற்றும் தடையற்ற எரிசக்தி விநியோகத்தை உறுதி செய்வது அனைத்து தரப்பினரின் பொறுப்பாகும் என்று அவர் கூறினார். மேலும், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் சீனா தொடர்ந்து தொடர்புகளை வலுப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

**ஜப்பான்** பிரதமர் சனே தகாய்ச்சி புதன்கிழமை தொடங்கும் தனது அமெரிக்கப் பயணத்தின் போது இந்த விவகாரம் குறித்து விவாதிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஹோர்முஸ் நீரிணையைத் திறக்க உதவி கோரி தனது நாட்டிற்கு எந்த அதிகாரப்பூர்வ கோரிக்கையும் வரவில்லை என்று திங்களன்று தகாய்ச்சி கூறியிருந்தாலும், 'தகுந்த முறையில் எவ்வாறு பதிலளிப்பது' என்பது குறித்துப் பரிசீலித்து வருவதாகத் தெரிவித்தார்.

**பிரான்ஸ்:-**பிரான்ஸ் வெளியுறவு அமைச்சகத்தின்(21ம்பக்கம் பார்க்க)



# அரசியல் தூசணம்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



அண்மையில் சுமந்திரனின் பிறந்த நாள் அன்று ஒரு பெண் அரசியல் செயற்பாட்டாளர், சுமந்திரனுக்கு விசுவாசமானவர், முகநூலில் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்திருந்தார். அதில் அவர் உன்னுடைய எதிரி யாரைக் கண்டு பயப்படுகிறானோ அவன் தான் உனக்குத் தலைவர் என்ற பொருள்பட எழுதி வாழ்த்தியிருந்தார்.

அவர் அவ்வாறு எழுதியதை இக் கட்டுரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவ்வாறு வாழ்த்த அவருக்கு உரிமை உண்டு. அதேசமயம் அதற்கு எதிராக எழுத மற்றவர்களுக்கும் உரிமை உண்டு. ஆனால் அதற்கு ஒரு



பண்பாட்டு எல்லைக்கோடு உண்டு. தனது தாய்க்கு எதிராக சகோதரிக்கு எதிராக, மனைவி அல்லது காதலிக்கு எதிராக மற்றவர்கள் எதை எழுதக் கூடாது என்று ஒருவர் எதிர்பார்க்கிறாரோ, அதை அவரும் இன்னொரு பெண்ணுக்கு எதிராக எழுதக் கூடாது. இதுதான் பண்பாட்டு எல்லைக்கோடு.

ஆனால் அந்தப் பெண் மீது கொட்டப்பட்ட தூஷணத்தை விஷத்தை தொகுத்து பார்த்தால் அவை தமிழ்த் தேசிய பண்பாட்டு இதயத்தின் செழிப்பைக் காட்டவில்லை. சீரழிவைத் தான் காட்டின. அவர் ஒரு குடும்பப் பெண். பொது வாழ்வுக்கு வந்து விட்டார் என்பதற்காக அவரைக் கண்டபடி தாக்கினார்கள். ஆனால் தேசியவாத அரசியல் என்பது பாலியல் சமத்துவத்தின் மீது தான் கட்டி எழுப்பப்படுவது. சகபாலரை மதிக்கத் தெரியாத ஒருவர் சக பாலரை அந்த தேசிய ஆன்மாவின் பண்பாட்டு எல்லைகளைத் தாண்டி விமர்சிக்கும் ஒருவர், தன்னைத் தேசியவாதி என்று கூறிக் கொள்ள முடியாது.

அப்படியானால் அந்தப் பெண் தனக்கு எதிராக தூஷணத்தைக் கக்கிய நபர்களுக்கு எதிராக நிகழ் நிலை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கலாமா? அது போன்ற அவதூறுகளுக்கு எதிராகத் தான் சாணக்கியன் நிகழ் நிலை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுத்தவரா?

தமிழரசுக் கட்சி நிகழ் நிலைப் பாதுகாப்புச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. சுமந்திரன் அதற்கு எதிராக கருத்து தெரிவித்திருக்கிறார். ஏன் சாணக்கியனே நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தியிருக்கிறார். ஆனால் இப்பொழுது தன்னை அவதூறு செய்தவர்களுக்கு எதிராக அந்த சட்டத்தின் கீழ் வழக்கு தொடுத்திருக்கிறார். இதில் ஓர் அக முரண்பாடு உண்டு. இது தொடர்பாக தமிழரசுக் கட்சி தன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும்.

மேலும் சாணக்கியன் நாடாளுமன்றத்தை உட்கட்சி முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் மேடையாகப் பயன்படுத்துகிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. கடந்த வாரம் நாடாளுமன்ற சிறப்பு உரிமைகளை ஒரு பாதுகாப்புக் கவசமாகப் பயன்படுத்தி அவர் தெரிவித்த கருத்துக்கள் எந்த வகை அரசியல் கலாச்சாரத்தைச் சேர்ந்தவை?

இடதுசாரிகள் முரண்பாடுகளைக் கையாளும் போது நேச முரண்பாடு பகை முரண்பாடு என்று பிரிப்பார்கள். தாய்ப் பூனை இரையைக் கவ்வுவதற்கும் குட்டியை கவ்வுவதற்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்று அதை விளங்கப்படுத்துவார்கள். ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினர் நாடாளுமன்றத்தில் உட்கட்சிச் சண்டைகளைப் பேசுகிறார்கள். உட்கட்சி முரண்பாடுகளை வழக்குகளின் மூலம் கையாளப் பாக்கிறார்கள். சட்ட நடவடிக்கை என்ற விடயத்தை தமது அரசியல் எதிரிகளுக்கும் தம்மை விமர்சிப்பவர்களுக்கும் எதிரான ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்கள்.

ஆனால் அரசியல்வாதி ஒருவருக்கு எதிரான அவதூறு எனப்படுவது இப்போதுள்ள தமிழ்த் தேசிய அரசியல் சூழலில், ஒரு சட்டப் பிரச்சினை மட்டுமல்ல. அதை விட ஆழமான பொருளில் அது ஓர் அரசியல் பண்பாட்டு பிரச்சினை.

தமிழ் தேசிய அரசியல் விமர்சன பாரம்பரியத்தின் சீரழிவை இது காட்டுகின்றது. இதை இன்னும் ஆழமான வார்த்தைகளில் சொன்னால் தமிழ் தேசிய அரசியலின் ஜனநாயக இதயம் நோய்க்கூறானதாக மாறி வருகிறது என்பதனை அது காட்டுகிறது.

பெண்கள் அல்லது தனிப்பட்ட முறையில் அவமானப்படத் தயாராக இல்லாதவர்கள் தமது பொதுவாழ்வுக்காக தமது நிம்மதியைத் தொலைக்கத் தயாராக இல்லாதவர்கள் போன்ற பலரும் அரசியலில் ஈடுபடத் தயங்குவதற்கு இது ஒரு பிரதான காரணம்.

தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட தலைமைத்துவப் போட்டிக்குப் பின்னரான கடந்த இரண்டு ஆண்டுகளிலும் இந்தப் போக்கு மேலும் அதிகரித்து வருகிறது.

கடந்த 16 ஆண்டுகால தமிழ்த் தேசியக் கூட்டு உளவியல் என்பது கொந்தளிப்பானது. அவமானகரமான ஒரு கூட்டுத் தோல்விக்கும் கூட்டு இழப்புக்கும் கூட்டுக் காயங்களுக்கும் பின்னரான கூட்டு உளவியலானது கொந்தளிப்பான தாகத் தான் இருக்கும். அது யாரையும் நம்பாது. யாராவது சமூகத்தில் மினுங்கிக் கொண்டு வந்தால் அவரை எச்சரிக்கை உணர்வோடு அல்லது எரிச்சலோடு பார்க்கும். யாரையாவது தாக்க நினைத்தால் அவரை எங்கே தாக்கினால் வலிக்குமோ அங்கே தாக்கும். சமூக வலைத்தளங்களின் சுதந்திரச் சூழல் அதற்கு இடம் கொடுக்கின்றது. சமூக வலைத்தளங்களின் எழுச்சியோடு ஒரு புறம் குரலற்ற மக்களுக்கு குரல் கொடுக்க இடம் கிடைத்திருக்கிறது. அதேசமயம் வெறுப்பவர்களை விஷம் கக்கிகளை,தூஷணம் கொட்டிகளை, பொது வெளியில் கழியும் வெறுப்பர்களை அது பரவலாகியுள்ளது. குழுக்கள் ஆக்கியுள்ளது.

இந்தப் போக்கு கடந்த 16 ஆண்டுகளாக தான் இருந்து வருகிறது என்பதல்ல. ஆயுதப் போராட்டத்திலும் இருந்தது. தமிழ்த் தேசிய அரசியலில் அதிகமாக சூழ்ச்சி கோட்பாடுகள் உற்பத்தி செய்யப்பட்ட காலகட்டம் அதுதான். விமர்சனங்கள் துப்பாக்கி முனையில் அல்லது பச்சை மட்டைகளால் தீர்க்கப்பட்டதுண்டு.

ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரான மிதவாத அரசியலிலும் அது இருந்தது. கொள்கை எதிரிகளை துரோகிகள் ஆக்குவது அல்லது காசுக் கள்ளர்கள் ஆக்குவதுபாலியல் குற்றவாளிகளாகச் சித்தரிப்பது அவர்களுடைய அந்தரங்கத்தை மறைமுகமாகப் பேசுவது அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை அருவருப்பான உவமைகளுக்கு ஊடாகக் கூறுவது போன்றன அங்கேயும் இருந்தன. அதிலும் குறிப்பாக அங்கே மல முட்டிப் பாரம்பரியம் இருந்தது. தனது கட்சி எதிரியின் வீட்டு முற்றத்தில் மலம் நிரம்பிய மண் முட்டியைக் கொண்டு போய் உடைத்து விடுவது. அதே மல முட்டிகளோடு, மொட்டை கடிதங்களோடு, முகமூடிகளோடு ஒரு பகுதியினர் இப்பொழுது சமூக வலைத் தளங்களில் வெறுப்பை, விஷத்தைக் கக்கியபடி திரிகிறார்கள்.

இவர்கள் மத்தியில் படித்தவர்கள் உண்டு. லோயர்கள் உண்டு மருத்துவர்கள் உண்டு ஆசிரியர்கள் உண்டு அரசியல் செயற்பாட்டாளர்கள் உண்டு கட்சிகளில் பொறுப்பான பதவிகளை வகிப்பவர்கள் உண்டுதலை முழுக்க நரைத்த வயது போனவர்கள் உண்டு. ஆனால் ஒரு நல்ல விடயம் பெண்கள் இதில் குறைவு.

இது அரசியல்வாதிகள் அல்லது அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் மட்டுமல்ல. சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் உண்டு. படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள்,அறிவு ஜீவிகள் மத்தியிலும் உண்டு. இலக்கியவாதிகள் தங்களுக்கு இடையே மோதும் போது எதிர்த் தரப்பின் இடுப்புக்கு கீழே அடிப்பது என்பது நீண்ட காலமாக இருந்து வருகிறது. யாருக்கு எங்கே அடித்தால் அதிகம் வலிக்குமோ அந்த உயிர் நிலையில் அடிப்பது. அதாவது பிறப்பு உறுப்பில் அடிப்பது.அல்லது பிறப்பு உறுப்போடு சம்பந்தப்பட்ட விடயங்களை, உறவுகளைத் தாக்குவது.

தமிழ் மக்கள், அரசாங்கத்தை பொறுப்புக் கூற வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் பொதுவெளியில் துருத்திக் கொண்டு தெரியும் பலரும் எதிர்த் தரப்பை விமர்சிக்கும் போது தமது மூப்பை படிப்பை, சமூகப் பொறுப்பை, தமது மதத்தின் வழியாக தாங்கள் கற்றுக் கொண்ட அறத்தை ஒழுக்கத்தைப் பிரதிபலிக்கும் வார்த்தைகளை ஏன் பயன்படுத்துவதில்லை?

தாங்கள் சமூக வலைத்தளங்களில் எழுதுகின்ற அல்லது தங்களுடைய குருட்டு விசுவாசிகளை ஏவி எழுதுகின்ற விடியங்களை தங்களுடைய பெற்றோர் தங்களுக்கு ஏடு தொடங்கியவர், ஞானஸ்தானம் கொடுத்தவர், தங்களுடைய மனைவி பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பார்த்தால் தங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற பண்பாட்டுக் கூச்சம்,பொறுப்பு இவர்களுக்கு ஏன் இல்லாமல் போனது?

இது ஒரு கூட்டு உளவியல் நோயாக பெருகி வருகிறது. இதை மருத்துவர்கள் மட்டும் குணப்படுத்த முடியாது. சட்ட நடவடிக்கைகளால் மட்டும் தீர்த்து விட முடியாது. பதிலாக இது ஒரு பண்பாட்டுப் பிரச்சினை. ஒரு கூட்டுப் பிரச்சினையை கூட்டாகத் தான் தீர்க்க வேண்டும். ஆனால் துயரம் என்னவென்றால் அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பில் இருப்பவர்களே அதாவது அரசியல்வாதிகளே இந்தப் பண்பாட்டுச் சீரழிவுக்கு முக்கிய பொறுப்பு என்பதுதான்.

ஈழத்தமிழ் அரசியல் பரப்பில் மட்டுமல்ல உலகப்பரப்பில், உலகப் பேரரசு அமெரிக்காவின் ஜனாதிபதி டிரம்ப் எப்படித் தோன்றுகிறார்? என்ன பேசுகிறார்? அண்மை ஆண்டுகளில் உலகில் அதிகம் விமர்சிக்கப்பட்டவர் அவர் தான். உலகம் பூராகவும் அவருக்கு எதிராக மீம்ஸ்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

குறிப்பாக கடந்த இரண்டு கிழமைகளுக்கு மேலாக நடந்து கொண்டிருக்கும் போரில் அவர் ஒரு கொடிய கொமெடி பீஸ் ஆக உருவகிக்கப்படுகிறார்.

மீம்ஸ் உருவாக்கிகள் அவருடைய மகனுக்கும் வட கொரியத் தலைவரின் மகளுக்கும் திருமணம் செய்து வைத்துப் பிள்ளையும் பெற்றுக் கொடுத்து விட்டார்கள்.

இவ்வாறு உலகப் பரப்பில் தன்னையும் தனது குடும்பத்தையும் அவதூறு செய்யும் சமூக வலைத்தளப் பாவனையாளர்களுக்கு எதிராக அவர் என்ன செய்யலாம் என்று நமது அரசியல்வாதிகளிடம் ஆலோசனை கேட்டால் என்ன?

# போரில் வெற்றியும் தோல்வியும்

கட்டுரையாளர்:-
– அழகு குணசீலன் –

ஈரானுக்கு எதிரான இஸ்ரேல் அமெரிக்க கூட்டுத் தாக்குதல் குறித்தும், வெற்றி தோல்விகள் குறித்தும் போரில் சம்பந்தப்பட்ட தரப்புகள் மட்டும் அன்றி, இரு தரப்பு ஆதரவுத் தளங்களில் இருந்தும் சமூக ஊடகங்களில் கருத்துக்கள் வெளி வருகின்றன. இவற்றில் பெரும்பான்மை ஆதாரமற்றவையாகவும், உண்மைக்கு புறம்பானவையாகவும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. ஒரு யுத்தத்தில் முதலில் கொல்லப்படுவது உண்மை என்பதை உறுதி செய்வதாக இது உள்ளது. AI தொழில் நுட்பம் இந்த பொய்மைகளுக்கு பெரும் பங்களிப்பு செய்கிறது. கருத்துச் சுதந்திர அடிப்படை ஜனநாயக உரிமையை துஷ்பிரயோகம் செய்ததாக இது அமைகிறது.



போரில் சம்பந்தப்பட்ட தரப்புகள் தங்கள் போருக்கான இலக்கை நேரடியாக அடைவதை கொண்டும் மற்றும் மறைமுகமாக போர் ஏற்படுத்தும் தாக்கங்களைக் கொண்டுமே அதனை மதிப்பீடு செய்ய முடியும். அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே இலக்கு வேறுபாடுகள் இருப்பது அவதானிக்கப்படுகிறது. அமெரிக்கா அணுவாயத கட்டுப்பாட்டை பெயரளவில் உச்சரித்தாலும் அதன் உச்ச இலக்கு ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர ஆட்சியை வீழ்த்தி, அமெரிக்க சார்பு ஆட்சியொன்றை ரெஹ்ரானில் ஏற்படுத்துதல்.

இந்த ஆட்சிக் கவிழ்ப்பு — பொம்மை அரச இயந்திர வரலாற்றில் அமெரிக்கா பல தடவைகள் தோல்விகளை சந்தித்துள்ள போதும், அந்த பாதையையே அது தெரிவு செய்கிறது. ஏனெனில் யுத்தம் அமெரிக்காவில் இடம் பெறாத வரை அதற்கான சேதாரம் குறைவானது. ஈரானின் மக்களுக்கான நல்லாட்சி அல்ல அமெரிக்க இலக்கு மாறாக அதனை பலவீனப்படுத்தி, இருப்பதையும் இல்லாதொழித்து, தனது எண்ணெய்ப் பசியை தீர்த்துக் கொள்வதே முதன்மையானது.

இஸ்ரேலின் முதன்மை இலக்கு முடியுமானால் ஈரானை முற்றாக அழித்து பலவீனப்படுத்தி, மத்திய கிழக்கில் தனது முதன்மை எதிரியை அழிப்பது. ஹமாஷ், ஹிஸ்புல்லா, ஹத்தி இராணுவ கட்டமைப்புக்கு ஈரான் வழங்குகின்ற ஆதரவு விநியோக சங்கிலியை அறுப்பது. உலக வரை படத்தில் இருந்து இஸ்ரேலை நீக்குவோம் என்ற ஈரானின் சிந்தனைக்கு பதிலடியாக ஈரானையே இல்லாமல் செய்வது. இந்த ஈரான், இஸ்ரேல் மிகைப்படுத்தப்பட்ட இலக்குகள், பூகோள அரசியல் ஐதார்த்தங்கள் இந்த போரின் வெற்றி தோல்வியை மதிப்பிட உதவக்கூடும். போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்ற வார்த்தைகள் மூலம் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் பிரகடனப்படுத்தப்பட்ட சமாதானத்திற்கான (?) போர்ச் சுமையை நாற்பது ஆண்டுகள் சுமந்தவர்கள் இலங்கை மக்கள். காலப்போக்கில் அமெரிக்க இரட்டை கோபுரம் மீதான 2011 செப்டம்பர் 11 தாக்குதலுக்கு பின்னர் இதன் மகுடம் பயங்கரவாதத்திற்கு'' எதிரான போராக மாற்றப்பட்டது. இதனூடான சர்வதேச சட்ட மாற்றங்கள் மானிட நேயத்திற்கு எதிரான சகல போர் முழக்கங்களையும் அங்கீகரிப்பதாக – நியாயப்படுத்துவதாக அமைந்தது. ஜே.ஆரின் கொழும்பு வாரிசுகளாக பின்வந்த அரச தலைமைகள் அத்தனையும் அதே பாதையில் பயணித்தன.

மறுபக்கத்தில் தனிநபர் வழிபாட்டு, போர்ப்பிரச்சார ஆயுத, இராஜதந்திர அரசியலில் தமிழ்த்தேசிய ஆயுதப் போராட்டம் தோற்றுப் போனது. ஆனால் கொழும்பு வென்றதா? என்றால் அதுவும் இல்லை. ஆயுத ரீதியில் வெற்றியாகத் தெரிந்தாலும் போர் எச்சங்கள் இன்னும் கொழும்பை ஆட்டுகின்றன. கொழும்பு நடாத்திய போர் தமிழீழ இலக்கை தடுத்தது – பயங்கரவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்தியது என்றாலும் அது கூறிய சமாதானத்திற்கான சமூக, பொருளாதார, அரசியல் இலக்கை அதனால் எட்ட முடியவில்லை. இன்னொரு வகையில் தென்னிலங்கையில் சட்டவாட்சி நாளாந்த துப்பாக்கி வேட்டுக்களால் கேள்விக்குள்ளாகி இருக்கிறது.

போதைவஸ்து, ஊழல், பாதாளக் கோஷ்டிகளின் பயங்கரவாதம் தொடர்கிறது. நடந்திருப்பது வெறும் களமாற்றம் மட்டுமே. பல சந்தர்ப்பங்களில் கடந்த கால போர் விட்டுச் சென்ற ஆயுதங்கள் மற்றும் முன்னாள் படைச் சிப்பாய்கள் முதல் படை அதிகாரிகள் வரையும், மேலும் போர்க்குணாம்ச அணுகுமுறையும் தென்னிலங்கையின் இன்றைய நிலைக்கு பின்னால் நிற்கின்றன.

மேற்குலகின் ஆதிக்க சக்திகளான அமெரிக்க ஐரோப்பிய கூட்டணி, நேட்டோ என்பன ஒன்றிணைந்து இந்த போர்களை நடாத்தினர். இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து இந்த போர்கள் மற்றோரு கட்டத்தை அடைந்து தேடியெடுக்கப்பட்டதும், சோடிக்கப்பட்டதுமான அணுவாயத வேட்டை, ஜனநாயக மீட்பு, சட்டத்தின் ஆட்சி, ஆட்சிக் கவிழ்ப்பு, மேற்கு ஆதரவு கைப் பொம்மைகளை ஆட்சியில் அமர்த்துதல், சர்வாதிகாரத்திற்கு எதிரான போராக உருமாற்றம் செய்யப்பட்டது. இன்று இரு வாரங்களுக்கும் மேலாக தொடரும் வளைகுடாப் போரில் இந்த இடத்தில் — ஹர்மூஸ் ஜலசந்தியில் சர்வதேசம் வந்து சிக்கியிருக்கிறது. ஈரானுக்கு எதிரான அமெரிக்க, இஸ்ரேல் போர்ப்பிரகடனம் உலகப் பொருளாதாரத்தின் அடி வயிற்றில் அடிக்க ஆரம்பித்து விட்டது.

என்ன காரணங்களை கூறி போரின் பங்காளிகள் நியாயப்படுத்தினாலும், சமகால டிஜிட்டல் தொழில்நுட்ப, சமூக ஊடக பிரச்சாரப்போருக்கு மத்தியில், இராணுவ, சமூக, பொருளாதார, அரசியல் பலம், பலவீனங்களுக்கு மத்தியில் போரின் வெற்றியை தீர்மானிப்பவை எவை என்பதும், வெற்றி என்பதன் வரையறை என்ன என்பதுமே ஆராயப்பட வேண்டிய முக்கிய அடிப்படைகளாகின்றன. சுருக்கமாகச் சொன்னால் போருக்குகான இலக்கை அடைவது வெற்றிக்கான மதிப்பீட்டின் முக்கிய குறிகாட்டி. இராணுவ பலம் கொண்ட ஒரு வல்லரசு, ஐ.நா.வையும் சர்வதேசத்தையும் புறம் தள்ளி இறைமையுள்ள தேசம் ஒன்றின் மீது குண்டு மழைபொழிந்து அடித்து நொருக்கி, அந்த தேசத்தின் சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பை நாசமாக்கியும், குடிமக்கள் பெண்கள்–குழந்தைகளை கொன்று குவித்து ஒரு நாட்டை அடி பணியவைத்து, தனது இலக்கை அடைந்து விட்டதாக பிரகடனம் செய்ய முடியும். இதற்கு பெயர் வெற்றியா?

ஏகாதிபத்தியக் கூட்டணிகளுக்கு எதிராக ஒரு நாடு ஒப்பீட்டளவில் சகல பலவீனங்களுடனும், பற்றாக்குறையான போர் வளங்களுடனும், பொருளாதார, அரசியல் தடைகளுக்கு மத்தியிலும் போராடினாலும் இறுதியில் வல்லரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படலாம். ஆட்சி கவிழ்ப்பு, ஜனநாயக மீட்பு, சர்வதிகார ஒழிப்பு..... என்றெல்லாம் போருக்கான உண்மையான காரணம் கூறப்படாமல் பலவீனமான மறு தரப்பு தோற்று விட்டதாக பிரகடனம் செய்யப்படலாம். இது உண்மையிலேயே ஒரு தேசத்தின் தோல்வியா?

உள்நாட்டு போர்– கிளர்ச்சிகளில் இந்த வெற்றி–தோல்வி ஓரளவு மதிப்பிடப் படக்கூடியதாக இருப்பினும், பிராந்திய, சர்வதேச போர்களில் இந்த வரையறையை அடைவது இலகுவானதும் அல்ல, சரியான மதிப்பீடும் அல்ல. போர்த்திறன் என்பது வெறுமனே இராணுவ பலம், அச்சுறுத்தல், இராஜதந்திர அழுத்தங்களினால் மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை. இரண்டாம் உலகப் போரில் ஹிட்லர் தோற்றார். எதிர்த்தரப்பு வெற்றி பெற்றது என்று கூறினாலும் இரண்டாம் உலகப்போரில் வெற்றி பெற்றது ஹிட்லரின் இனப்படுகொலையில் அழிந்த யூதர்கள் தான். அந்த அழிவு யூதர்கள் ஒரு பலமான தேசத்தை கட்டியெழுப்புவதற்கான சக்தியை வழங்கியது. மேற்குலகம் எந்த தார்மீக, கேள்வியும் எழுப்பாமல் கண்களை மூடிக்கொண்டு இஸ்ரேலின் நடவடிக்கைகளை அங்கீகரிக்கிறது. ஆனால் இஸ்ரேலியர்கள் நிம்மதியாக தூங்க முடியாத நிலையில், சுற்ற வர எதிரிகளை சம்பாதித்து இருக்கின்ற நிலையில், இஸ்ரேல் என்ற நாடு உருவாகி இருப்பது மட்டும் வெற்றியல்ல என்பதை நிரூபிக்கிறது. இந்த இடத்தில் இஸ்ரேல் இந்த வெற்றியை எப்படி அடைந்தது என்பது விவாதத்திற்கு அப்பாற்பட்டதல்ல.

வியட்நாமில் அமெரிக்கா தோற்றது. அமெரிக்காவினால் அழிக்கப்பட்ட வியட்நாம்– வடக்கு, தெற்கு வியட்நாம்களையும் இணைத்துக் கொண்டு இன்று தெற்காசியாவின் முக்கிய ஒரு தேசமாக எழுந்து நிற்கிறது. அமெரிக்காவின் போருக்கான இலக்கு இங்கு அடையப் படவில்லை.

ஆப்கானிஸ்தானில் ஒரு வல்லரசல்ல சோவியத் யூனியன், ஐக்கிய அமெரிக்கா என்ற இரு வல்லரசுகளும் தோல்வியடைந்தன. அமெரிக்க ஆதரவுடன் ரஷ்யா வெளியேற்றப்பட்டது. ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவது என்ற ஆப்கானிஸ்தானின் இலக்கு. பின்னர் அமெரிக்க ஆதரவு பொம்மை ஆட்சிக்கு எதிராக தலீபான் ஆட்சியை மீள நிறுவியது. பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு செய்திருந்தும் தனது இலக்கை அடைய முடியாமல் தலீபான்களுக்கு எதிராக தோற்றுப் போனது அமெரிக்கா. ஏகாதிபத்தியத்தை ஆப்கான் மண்ணில் இருந்து வெளியேற்றுவது என்ற இலக்கில் தலீபான்கள் வெற்றி பெற்றார்கள்.

அரபுலகில் ஈராக், லிபியாவில் அமெரிக்காவின் யுத்தம் அதன் தலைமைகளான சதாம் ஹுசைன், கடாபி ஆகியோரை வீழ்த்தியிருக்கலாம், இந்த ஆட்சி கவிழ்ப்பில் இருநாட்டு தலைவர்களினதும் சிலை உடைப்பை குறி காட்டியாக்கி கொண்டு வெற்றி தோல்வியை தீர்மானிக்க முடியுமா? ஈராக்கினதும், லிபியாவினதும் போரில் அமெரிக்கா சொன்ன அணுவாயுதம், ஜனநாயகம், சர்வாதிகாரம், சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றம் எவ்வளவுக்கு அடையப் பெற்றுள்ளது. ஆட்சியாளர்களை அகற்றுவது மட்டும் சுய இலாப அரசியலுக்கும், மறைமுகமான பொருளாதாரமும் ஒரு போரின் இலக்காக இருந்தால் முரணான தலைமைகளுக்கு பதிலாக இன்னொருவரை கதிரையில் அமர்த்தினால் போரில் வென்றதாகி விடுமா?

பலஸ்தீனம் அமெரிக்க ஆதரவுடன் இஸ்ரேலால் குண்டு வீசி தகர்க்கப்பட்டது. ஹாமாஷை அழித்து விட்டதாக சொன்ன இஸ்ரேலும், அமெரிக்காவும் இன்று ஆயுத ஒப்படைப்பை கோருகின்றன. ஆக இதுவரை அழிக்கப்பட்ட பங்கர்கள், சுரங்கப் பாதைகள், ஆயுதக் கிடங்குகள், ஹமாஷ் உறுப்பினர்கள் என்று வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களின் கதி என்ன? இன்னும் ஹமாஷின் இணக்கம் இன்றி பலஸ்தீனத்திற்கு தீர்வொன்றை காணமுடியாத நிலையில் அமெரிக்க — இஸ்ரேல் கூட்டணி இருக்கும் நிலையில் வென்றது யார்? தோற்றது யார்? அத்தனை அழிவுகளையும் (22ம் பக்கம் பார்க்க)



# தமிழர் அரசியல் பதிலில்லாத கேள்விகள்!

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



தமிழர்களின் அரசியலை முன்னெடுக்கக் கூடிய அளவுக்குத் தமிழ்க் கட்சிகளுக்குப் பலம் உண்டா? அதாவது அதற்கான அரசியல் உள்ளடக்கமும் திறனும் இராசாதந்திர ஆற்றலும் இருக்கிறதா? அல்லது தேசிய மக்கள் சக்தி தான் வடக்குக் கிழக்கிலும் பலமானதாக உள்ளதா? தமிழ் மக்கள் எதனை விரும்புகிறார்கள்? யாரை ஆதரிக்கிறார்கள்? தமிழ் மக்களுடைய எதிர்கால அரசியல் எப்படியிருக்கும்?

வடக்கும் கிழக்கும் தனித்தனியான அரசியல் முன்னெடுப்புகளை எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டியிருக்குமா? அவ்வாறெனில் அது எப்படியாக இருக்கும்? அதற்கான வடிவம் என்ன? முஸ்லிம் மக்களுடைய பங்கேற்பும் உடன்பாடும் இல்லாமல் வடக்குக் கிழக்கு பிராந்தியத்தின் அரசியல் தீர்வும் அபிவிருத்தியும் சாத்திமாகுமா? மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெற்றால் யாருக்கு வெற்றி கிட்டும்? இப்போதுள்ள தமிழ்த் தலைவர்களில் செல்வாக்கும் ஆற்றலும் உள்ளவர் யார்?

முஸ்லிம் அரசியற் கட்சிகள் சிங்களக் கட்சிகளுடன் எதற்காக அரசியல் உறவைக் கொண்டிருக்கின்றன? முன்பு ஆட்சியில் பங்கேற்கும் நிலை இருந்தது. இப்பொழுது அந்த நிலை இல்லை. இந்தச் சூழலில் முஸ்லிம்களும் தமிழர்களும் ஒத்த சவால்களையும் நெருக்கடிகளையும் சந்திக்கின்றனர். இந்த நிலையிலும் தமிழ்க் கட்சிகளுக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கும் இடையிலான தூரம் குறையாதிருப்பது ஏன்? மாகாணசபை முறைமையில் வடக்குக் கிழக்குக்கு அப்பால் மத்திய மாகாணம், ஊவா மாகாணம், மேல் மாகாணம், வடமேல் மத்திய மாகாணம் போன்றவற்றில் தமிழ் பேசும் மக்களுக்கான பிரதிநிதித்துவமும் அதிகாரங்களும் உள்ளபோதும் அங்குள்ள தமிழ் பேசும் தரப்புகள் மாகாண சபைகளைக் குறித்துப் பேசாதிருப்பது ஏன்?

தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளை சிங்கள மக்கள் இன்னும் புரிந்து கொள்ளாதிருப்பது ஏன்? அல்லது புரிந்து கொள்ள மறுப்பது எதற்காக? சிங்கள மக்களிடம் தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகள் பேசப் பட்டிருக்கிறதா? தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளையும் உண்மை நிலைமைகளையும் சிங்களச் சமூகம் புரிந்து கொள்வதற்கான ஊடகங்கள் ஏதாவது உண்டா? இதுவரையிலான தமிழ் மக்களுடைய அரசியல் எத்தகைய முன்னேற்றத்தையும் பாதுகாப்பையும் தமிழ் மக்களுக்குத் தந்துள்ளது? இதைக் குறித்த பரிசீலனைகளை தமிழ் அரசியற் கட்சிகளும் தலைமைகளும் மேற்கொண்டுள்ளனவா? சிங்கள அரசியலை எதிர்கொள்ளக் கூடிய வினைத்திறனும் புத்தாக்கச் சிந்தனையும் பொருத்தப்பாடும் உள்ள அரசியலைக்குறித்துத் தமிழ்ச் சமூகம் சிந்திக்காதிருப்பது ஏன்?

சர்வதேச சமூகம் தமிழர்களுடைய அரசியலுக்கு ஆதரவு நல்குமா? தமிழர்களுடைய அரசியல் குறித்து சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு என்ன? இளைய தலைமுறையின் அரசியல் ஈடுபாடுகள் எப்படி உள்ளன? இளைய தலைமுறையினருக்கான இடத்தை தமிழ் அரசியற் கட்சிகள் வழங்கத் தயங்குவது ஏன்? விடுதலை இயக்கங்களின் வழி வந்த தமிழ் அரசியற் கட்சிகள் ஜனநாயக அடிப்படையில் புதியவர்களுக்கான இடத்தை அளிக்கத் தயங்குவதற்கான காரணம் என்ன?

இப்படி ஒரு கொத்துக் கேள்விகள் தமிழ் அரசியலைக் குறித்து நிதானமாகச் சிந்திப்போரிடம் எழுகின்றன. இவ்வாறான கேள்விகளுக்கான பதிலை தமிழ் அரசியல் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் காண வேண்டும். முஸ்லிம், மலையகக் கட்சிகளும்தான். இத்தகைய கேள்விகளை பொதுவெளியில் தமிழ், முஸ்லிம், மலையக் கட்சிகள் தயக்கமின்றி எதிர்கொண்டு, அவற்றுக்கான பதில்களை அளிப்பது அவசியமாகும். ஊடக அறிக்கைகள், ஊடகச் சந்திப்புகளுக்கு அப்பால், மக்கள் அரங்குகளிலும் தனிநபர் உரையாடல்களிலும் அரசியற் தலைவர்கள் பங்கேற்க வேண்டும். இந்தி விடுதலைப்போராட்டத்தை காந்தி மக்களிடம் நேரில் சென்றே நடத்தினார். எத்தகைய அரசியலும் மக்களுடைய பங்கேற்பும் நெருக்கமும் ஏற்படும் போதே அது பலமடையும். இல்லையெனில், கட்சிகளின் அரசியலாகவும் தலைவர்களின் அரசியலாகவுமே சுருங்கி விடும். ஏறக்குறைய தமிழ்ச் சமூகத்தின் அரசியல் அப்படித்தான் சுருக்கங் கொண்டுள்ளது. இதை நாம் கடுமையாக விமர்சித்தே ஆக வேண்டும். தயக்கமில்லாமல் உண்மையை ஏற்க வேண்டும்.

தென்னிலங்கை அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சரியோ தவறோ சிங்கள மக்கள் புதிய தலைமைகளை வரவேற்றிருக்கிறார்கள். NPP ஒரு மாற்றுத் தலைமையா இல்லையா என்பதை காலம் நிரூபிக்க வேண்டும். இங்கே காலம் என்பது NPP யின் ஆட்சியையே குறிக்கும். ஜனநாயக ரீதியான அரசியல் தேர்வை ஓரளவுக்குச் சிங்கள மக்கள் பயன்படுத்துகிறார்கள். தலைமைகளையும் தரப்புகளையும் மாற்றிக் கொள்வார்கள்.

தமிழ்த் தரப்பில் இது அறவே கிடையாது. குடும்பச் சொத்துப்போலக் கட்சிகளும் வாழ்நாள் மன்றாடிகளைப் போல மக்களும் கேள்விகளற்று தமது அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது ஈழத் தமிழர்கள்தான். முஸ்லிம்களிடத்திலும் மலையக மக்களிடமும் கூடச் சற்று வித்தியாசமும் வேறுபாடுகளும் உண்டு. அவர்கள் தேவையான போது புதிய தலைமைகளை நோக்கி நகர்ந்து விடுகிறார்கள். இல்லையென்றால், இ.தொ. கா வை மிஞ்சி தமிழ் முற்போக்குக் கூட்டணி எப்படி வலுப்பெற்றது?

தமிழ் மக்களுக்கான அரசியலை முன்னெடுப்பது என்பது, விடுதலைக்கான அரசியலாகும். இந்த விடுதலைக்கான அரசியலில் தமிழ் மக்கள் இழந்தது அதிகம். பெற்றது இழப்புகள் இழப்புகள் இழப்புகள் தான். சிங்கள மொழியைப் படிக்க மாட்டோம் என்று தொடங்கிய வேலை இழப்பு பின்னர், வீடுகளை இழப்பதாக, ஊர்களை இழப்பதாக, உறவுகளை இழப்பதாக, உடல் உறுப்புகளை இழப்பதாக, உயிரை இழப்பதாக என மொத்தத் தமிழ்ச் சமூகத்தையும் உருக்குலைத்தது.

விடுதலைப் போராட்டத்தில் அதுவும் ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டத்தில் இவ்வாறான இழப்புகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். அப்படியென்றால், அந்த இழப்புகளுக்கான பெறுமானமாக விடுதலை உரிமை கிட்டியிருக்க வேண்டும். அது தான் சாத்தியப்படவில்லை என்றால், அடுத்த கட்டமாக என்ன செய்ய வேண்டும். சிதைந்தும் அழிந்தும் போயிருக்கும் மக்களின் சமூகத்தின் வாழ்வையும் அரசியலையும் எப்படி முன்னெடுப்பது என்று நிதான மாகச் சிந்தித்திருக்க வேண்டும். அது நடந்ததா? இல்லையே!

பதிலாக பாதிப்புக்குள்ளான மக்களை மேலும் பாப்படையச் செய்யும் வகையில் நாடுகடந்த தமிழீழ அரசு தொடக்கம், எழுக தமிழ், பொத்துவில் முதல் பொலிகண்டிவரை நிகழ்ச்சி, ஒன்றுக்கும் உதவாக ஆயிரக்கணக்கான விழல் பிரகடனங்கள், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் பாராளுமன்றத்திலும் ஆளையாள் வசைபாடும் வகையிலான பொறுப்பற்ற செயற்பாடுகள் தொடர்கின்றன. இதைக் குறித்து எத்தகைய ஆட்சேபனைகளையும் செய்யால், தமது கண்டனங்களை வெளிப்படுத்தாமல் இவற்றுக்கு குஞ்சரம் கட்டி அலங்காரம் செய்யும் வேலைகளையே 'தமிழ் அரசியல் ஆய்வாளர்கள்' என்போரும் ஊடகங்களும் செய்து கொண்டிருக்கின்றனர். போதாக்குறைக்கு கோமாளித்தனமான வகையில் தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த்தேசியப் பேரவை, தமிழ் மக்கள் ஒன்றியம் அப்படி இப்படி என ஆளுக்கொன்று, அணிக்கொன்று, நாளுக்கொன்று, வாரத்துக்கொன்று என புதிது புதிதாக அமைப்புகள் வேறு உருவாக்கப்படுகின்றன. சுடு சொரணை இல்லாமல் இதில் சல மதகுருக்களும் வந்து ஓரத்தில் அமர்ந்து கொள்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களோ நிர்க்கதியான நிலையில் துயரத்தோடு கிடந்து மல்லாடுகிறார்கள். இவர்களில் ஒருவர் கூட பாதிக்கப்பட்ட நிலையிலிருக்கும் மக்களின் வீடுகளுக்கோ, அவர்கள் வாழும் பகுதிகளுக்கோ சென்றது கூட இல்லை. ஆதரவாக ஒரு சிறிய ஏற்பாட்டைச் செய்தது கூட இல்லை. எல்லோரும் பிரமுகர்கள் என்றால், யார் பணி செய்வது?

இவையெல்லாம் ஏற்படுத்திய அதிருப்தியே தமிழ் மக்களை தேசிய மக்கள் சக்தியின் பக்கமாகத் திருப்பியது.

(22ம் பக்கம் பார்க்க)

# ஈழ ஆதரவு அரசியல் என்றால் என்ன?

தமிழ்நாட்டு அரசியலில் ஈழத்தமிழர் விவகாரம் அவ்வப்போது பேசப்படுவதுண்டு. (நாங்கள் அப்படியல்ல. தொடர்ச்சியாகவே ஈழத் தமிழர்களுடைய விடுதலையைப் பற்றிப் பேசி வருகிறோம் என்று பழ நெடுமாறன், வை.கோ, கொளத்தூர் மணி போன்ற சிலர் சொல்லக்கூடும். இதைக் குறித்துப் பின்னர் பார்க்கலாம்). தேர்தல் காலமென்றால், இன்னும் சற்று உரத்த தொனியில் இந்தப் பேச்சுக்குரல் கேட்கும். இப்போதும் அப்படித் தான், தமிழ்நாட்டு அரசியல் மேடைகளிலும் அரங்குகளிலும் ஈழத்தமிழர் அரசியலும் விடுதலைப் புலிகள் இயக்கமும் அதனுடைய தலைவர் பிரபாகரனின் பெயரும் பேசப்படுகின்றன. இதில் சீமான் சற்றுச் சத்தமாக முழங்குகிறார். இப்படிப் பேசப்படுவதால் ஈழத்தமிழர்களுக்கு என்ன பயன் கிடைத்தது கிடைக்கிறது எதிர்காலத்தில் எத்தகைய நன்மைகள் கிட்டும் என்பதைப் பற்றியெல்லாம் எவருக்கும் கவலை இல்லை. அதைப்பற்றிப் பரிசீலனை செய்வது கூட இல்லை.

இதில் நாம் மூன்று வகையினரைப் பார்க்கலாம். ஒரு தரப்பு மெய்யாகவே ஈழ விடுதலை கிடைக்க வேண்டும், ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை பெற வேண்டும் என்று நியாயமாகவே விரும்புகிறது. ஆனால், இந்தத் தரப்புக்கு இலங்கை இனப்பிரச்சினையின் சிக்கலான தன்மையைப் பற்றிச் சரியான புரிதல் இல்லை. ஈழவிடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின் நிலைமை இன்னும் சிக்கலடைந்துள்ளது என்பதையும் இந்தத் தரப்பு சரியாக அறிந்து கொள்ளவில்லை.

அதைப் புரிந்து கொண்டால் தான் ஈழ விடுதலைக்கான அல்லது ஈழத்தமிழரின் உரிமைக்கான சாத்தியப்பாடுகளைப் பற்றிச் சிந்திக்க முடியும். குறிப்பாக இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்களின் தனித்துவம், அவர்களுக்குரிய இடம், இந்தப் பிரச்சினையில் அவர்களுடைய வகிபாகம் போன்றவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக ஈழவிடுதலையை அல்லது இலங்கையின் சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைப் பிரச்சினையைப் பற்றிப் புதிய வாசிப்புச் செய்ய வேண்டும். அதற்கான உழைப்பும் உணர்திறனும் அவசியமாகத் தேவைப்படுகிறது. ஆனாலும் இந்தத் தரப்பினரிடத்தில் நியாயமான உணர்வு உண்டு.

அடுத்த தரப்பு, ஈழப் போராட்டத்தைத் தன்னுடைய அரசியற் தேவைக்காக எடுத்தாள்கிறது. இது வெற்றுப் பிரகடனங்களிலும் தீவிர உணர்ச்சி நிலையிலும் இந்த விசயத்தை எடுத்தாள்கிறது. நம்முடைய தொப்புள் கொடி உறவுகளான தமிழர்களைச் சிங்களர்கள் தாக்குகிறார்கள் கொல்கிறார்கள். சிங்கள அரசு தமிழ் மக்களைப் படுகொலை செய்கிறது என்ற அடிப்படையில் நோக்கிக் கொதிப்படைகிறது. இந்தத் தரப்பில் ஊடகங்களும் இலக்கிய அமைப்புகள், வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள் போன்றனவும் அடங்கும். இதொரு அயல் நாட்டின் அரசியற் பிரச்சினை. ஆகவே அதற்குரிய வரன்முறைகளும் எல்லைகளும் இருக்கும். இதைப் புரிந்து கொள்ளாமல் கொதிப்பதாலும் பொங்குவதாலும் எந்தப் பயனுமில்லை. இந்தத் தரப்பு பிரச்சினையை மேலும் சிக்கலடைய வைக்கிறது. இவர்களுடைய குரல் உயர உயர, ஈழத்தில் நெருக்கடி அதிகரிக்கிறது.

மூன்றாவது தரப்பு, ஈழப்போராட்டத்தை விடுதலைப்புலிகளோடு மட்டுப்படுத்திப் பார்ப்பது. மறுபக்கத்தில் இனவாதச் சிங்கள அரசைக் கடுமையாக எதிர்ப்பது. அதை அழித்தொழிக்க வேண்டும் என்று பிரகடனம் செய்வது. இப்பொழுது சீமான் இதில் முன்னணி வகிக்கிறார். இது சாத்தியமே இல்லாத கனவுலகப் பிரகடனங்களைச் செய்து காலத்தையும் சக்தியையும் வீணடிக்கிறது. மட்டுமல்ல ஈழ அரசியலைப் புரிந்து கொள்ளாமல் அதைத் தலைகீழாக்க முயற்சிக்கிறது. இந்தத் தரப்பினால் ஒரு சல்லிப் பணத்துக்குப் பிரயோசனமில்லை.

இதையெல்லாம் பார்த்தால், தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்களும் அரசியற் கட்சிகளும் அரசியல் அறிவே இல்லாதவர்களா? என்று கேட்கத் தோன்றும். அப்படிச் சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறார்கள். சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறார்கள். உண்மையைத் துணிந்து சொல்வதென்றால், ஈழத்தமிழர்களுடைய அரசியலை உரத்த தொனியில் பேசுவதால் ஈழத்தமிழர்களின் அரசியல் மேலும் சிக்கலடைந்து கொண்டேயிருக்கிறது. ஈழத்தமிழர்களின் அரசியல் மட்டுமல்ல, இலங்கையிலுள்ள முஸ்லிம் மக்களுடைய அரசியலும் நெருக்கடிக்குள்ளாகிறது. மட்டுமல்ல, இந்தியாவிலிருந்து 1800களில் இலங்கைக்குப் பெயர்க்கப்பட்டு இலங்கையின் மலையகப் பகுதிகளில் உள்ள மக்களின் (இந்திய வம்சாவழியினரின்) அரசியலும் நெருக்கடிக்குள்ளாகிறது. அதாவது இலங்கையில் சிறுபான்மையினராக இருக்கும் மொத்தத் தமிழ்பேசும் மக்களின் அரசியல் பாதிக்கப்படுகிறது.




காரணம், தமிழ்நாட்டில் ஈழத் தமிழர் விவகாரத்தை விடுதலையை உரிமைகளைப் பற்றிப் பேசுவதையும் தமிழ்நாட்டில் எடுக்கப்படும் தீர்மானங்களையும் சிங்கள மக்கள் வேறுவிதமாகவே எதிராகவே பார்க்கிறார்கள். அவர்களுடைய பார்வையில் அல்லது புரிதலில் 'இலங்கையின் சிறுபான்மையின மக்களுக்கு (தமிழ் பேசும் தரப்பினருக்கு) இந்தியா பேராதரவை வழங்குகிறது. சிங்களவர்களுக்கு இந்தியா எப்போதும் எதிராகவே உள்ளது' என்றே பொருள் கொள்ளப்படுகிறது. இப்படிச் சிந்திப்பதால், மேலும் தமிழ்பேசும் மக்களை சிங்கள அரசாங்கம் ஒடுக்குகிறது. இது அச்சத்தினால் உருவாகும் உளவியலின் விளைவாகும்.

தமிழ்நாட்டை இந்தியா என்றே பெரும்பான்மையான சிங்களவர்களும் புரிந்து கொள்கிறார்கள். ஆகவே 'தமிழ் பேசும் மக்களுக்குத் தமிழ்நாடு ஆதரவாக இருக்கிறது என்பதை இந்தியா ஆதரவாக இருக்கிறது என்றே பார்க்கிறார்கள். ஆக,தமக்குத்தான் எவருடைய ஆதரவும் இல்லை. இந்த உலகத்தில் தாம் (சிங்களவர்) ஒரு சிறிய இனம். இலங்கையில் பெரும்பான்மையினராக இருந்தாலும் உலகத்தில் தனித்துவிடப்பட்ட, சின்னஞ்சிறிய இனம். இரண்டு பில்லியன் மக்கள் மட்டுமுள்ள இனம். அதுவும் இலங்கைத்தீவில் மட்டுமே உள்ள இனம். இந்த நிலையில் அயலில் உள்ள தமிழ்நாடும் இந்தியாவும் தமிழர்களோடு சேர்ந்து தம்மை நெருக்கடிக்குள்ளாக்கப் பார்க்கிறது' என்றே சிங்களத் தரப்பினால் கருதப்படுகிறது.

இதற்கு வலுவானதொரு வரலாற்றுக் காரணமும் சிங்களத் தரப்பிடமுண்டு. வரலாற்றுக் காலம் தொட்டு, இலங்கையின் மீது தென்னிந்தியப் படையெடுப்புகளும் ஆக்கிரமிப்பும் நிகழ்ந்திருக்கிறது. சோழர்காலம் இதில் மேலும் உச்சமடைந்திருந்தது. 'பொன்னியின் செல்வன்' உங்கள் நினைவுக்கு வரலாம். இலங்கையின் மிகப் புகழ் மிக்க ஆட்சி மையங்களாக இருந்த அநுராதபுர ராஜ்ஜியத்தையும் பொலநறுவை ராஜ்ஜியத்தையும் சோழப்படையெடுப்புகளே வீழ்ச்சியடையச் செய்தன. இப்படித் தென்னிந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புகளும் ஆக்கிரமிப்புகளும் சிங்களச் சமூகத்தின் ஆழுள்ளத்தில் நீங்காத வெறுப்பாகவும் வரலாற்றுக் காயமாகவும் வளர்ந்துள்ளது. தமது ஆட்சியையும் தாம் உருவாக்கிய நீர்ப்பாசனம் உள்ளிட்ட சிறப்பான கட்டமைப்புகளையும் தென்னிந்தியர்கள் (தமிழர்கள்) படையெடுத்து வந்து ஆக்கிரமித்தனர் என்ற வரலாற்றுக் கோபம் சிங்கள மக்களிடத்தில் உண்டு.

இலங்கையின் நீர்ப்பாசன வரலாறு கிமு 5ஆம் நூற்றாண்டு முதல் (பாண்டுகாபய மன்னன் காலம்) தொடங்கும் மிக நீண்ட மற்றும் மேம்பட்ட பொறியியல் பாரம்பரியத்தைக் கொண்டது. உலர் வலய விவசாயத்திற்காக குளங்கள் (ஏரிகள் — Wewa) மற்றும் கால்வாய் அமைப்புகளை உருவாக்கி, குளங்களின் சங்கிலித் தொடர் (Tank Cascade System) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, மன்னர்கள் நாட்டைத் தன்னிறைவு அடையச் செய்தனர். பொலன்னறுவை காலத்தில் பராக்கிரம சமுத்திரம் போன்ற பிரம்மாண்டமான ஏரிகள் கட்டப்பட்டன. பிசோகொட்டுவ (Biso Kotuwa – Valve Pit) எனப்படும் கசிவுத் தடுப்பு மற்றும் நீர் கட்டுப்பாட்டு கோபுரம் கி.பி. 03 ஆம் நூற்றாண்டிலேயே கண்டு பிடிக்கப்பட்ட ஒரு புரட்சிகரமான தொழில் நுட்பமாகும். இதை உருவாக்கிய பிரதான மன்னர்கள், வசபன் (பெரிய குளங்கள்), தாதுசேனன் (கலாவேவ), முதலாம் பராக்கிரமபாகு (பராக்கிரம சமுத்திரம்) ஆகியோர் நீர்ப்பாசனத் துறையில் முக்கிய பங்காற்றினர். இலங்கையின் இந்த நீர்ப்பாசன கலாச்சாரம், சுமார் 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக நிலையான விவசாயத்திற்கும், உணவுப் பாதுகாப்பிற்கும் அடிப்படையாக இருந்து வருகிறது.

இப்படி உருவாக்கப்பட்ட நீர்ப்பாசனப் பொறிமுறையை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பொருளாதாரத்தையும் கடலில் முத்துக் குளிப்பதையும் இரத்தினக்கல் மற்றும் ஏலம், கராம்பு, கறுவா, மிளகு போன்ற வாசனைப் பொருட்களையும் கொண்ட பெரு வணிகத்தையும் சோழர் தமதாக்கிக் கொண்டனர். இந்த ஆக்கிரமிப்புத் தன்மை இன்றைய இந்த யுகத்திலும் ஏதோ ஒரு விதத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதில் ஒன்று தான் ஈழத் தமிழரின் அரசியலை உரிமைப் பிரச்சினையைச் சாட்டாகவும் சாதகமாகவும் வைத்துக் கொண்டு இந்தியாவும் தமிழ்நாடும் விளையாடுகின்றன என்றே சிங்களர் கருதுகிறார்கள். இதை நாம் மேலும் புரிந்து கொள்ள சிங்களவர்களின் வரலாற்று(? ) நூலாகக் கருதப்படும் மஹாவம்சத்தைப் படித்தறியலாம். மஹாவம்சத்தில் இந்திய எதிர்ப்பு வாதமும் தமிழ்கள் மீதான வெறுப்பும் தாராளமாகவே பதியப்பட்டுள்ளன.

இந்தப் பதிவுக்கு வயது 2000க்கு மேல். மட்டுமல்ல, இன்றைய நாளும் கூட அதனோடு பதிவு செய்யப்படுகிறது. அதாவது, மஹாவம்சம் எழுதப்பட்ட காலத்திலிருந்து தொடர்ச்சியாக அதனுடைய வரலாறு பதியப்பட்டு வருகிறது. ஒவ்வொரு முக்கிய சம்பவமும் வரலாறாகப் பதிவு பெறுகிறது. ஆகவே இந்தப் பின்னணியில், இந்தியா தொடர்பாகவும் தமிழ் பேசும் மக்கள் பற்றியும் எதிர்மறை எண்ணத்தோடு ஆட்சி அதிகாரத்தைக் கொண்டுள்ள சிங்களத் தரப்பு, எப்படி எச்சரிக்கையாகவும் தீவிர நிலையிலும் பழிதீர்க்கும் முனைப்போடும் இயங்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் சிங்களத் தரப்பு கருதுவதைப் போல உண்மையான நிலவரம் இல்லை. முக்கியமாக, இந்திய மத்திய அரசு தமிழ் மக்களுக்குச் சாதகமாக இல்லை. அப்படி இருந்திருக்குமாக இருந்தால், இலங்கையில் இந்தளவு பெரிய இனப்படுகொலைகளும் ஒடுக்குமுறையும் நடந்திருக்க வாய்ப்பில்லை. எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக எந்த விதமான அரசியல் தீர்வையும் வழங்காமல் இலங்கை இழுத்தடிக்கவும் முடியாது. இலங்கையும் இந்தியாவும் இணைந்து செய்து கொண்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் உள்ள மாகாணசபை ஆட்சியை உரிய முறையில் நடைமுறைப்படுத்தியிருக்கும். குறைந்த பட்சம் அதற்கு ஒழுங்காகத் தேர்தலையாவது நடத்தும். அப்படி எதுவும் நடக்கவில்லை என்றால் அது எதனைக் குறிக்கிறது அதனுடைய அரசியல் சேதி என்ன?

மறுபக்கத்தில் தமிழ்நாட்டு அரசும் மக்களும் முழுமையான ஆதரவை ஈழப்போராட்டத்துக்குத் தருவதாகச் சொன்னாலும் அதனால் எந்த பயனும் கிடைத்ததில்லை. கிடைக்கப் போவதுமில்லை. இந்திய மத்திய அரசு ஈழத் தமிழர்களுக்கு உவப்பானதொரு தீர்மானத்தை எடுக்காத வரையில் தமிழ்நாட்டினால் எதையும் செய்யவே முடியாது. இலங்கையின் இனப்பிரச்சினையைப் பற்றி இந்திய மத்திய அரசு பேசத் தொடங்கி 50 ஆண்டுகள் கடந்து விட்டன.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்ற பேரில் ஆயுதப் போராட்டத்துக்கு மறைமுகமான முறையில் மத்திய மாநில அரசுகள் தாராளமான ஏராளமான உதவிகளைச் செய்தன என்பது உண்மையே. மட்டு மல்ல, இந்திய அரசின் மத்தியஸ்தத் துடன் பல சுற்றுப் பேச்சுகள் ஈழத்தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடந்ததும் உண்மை.

உச்சக்கட்டமாக 1987இல் இலங்கை இந்திய உடன்படிக்கையே செய்யப்பட்டது. ஆனாலும் விளைவுகள் எதுவும் நல்லனவாக அமையவில்லை. முக்கியமாக ஈழப்போரின் போதும் சரி, ஈழப் போரின் இறுதிக் காலத்திலும் சரி தமிழ்நாட்டின் கொந்தளிப்பு அரசியல் நல்விளைவுகள் எதையும் உருவாக்கவில்லை. காரணம், அதனுடைய அதிகார எல்லை மட்டுப்படுத்தப்பட்டது.

இது எதைக் காட்டுகிறது? இந்திய மத்திய அரசை மீறித் தமிழ்நாடு எதையும் செய்ய முடியாது என்பதைத் தானே! அந்த நாட்களில் நெருக்கடிக் குள்ளாகிய ஈழத் தமிழர்களுக்காக மனிதாபிமான அடிப்படையில் தமிழ்நாட்டில் பல்வேறு தரப்பினராலும் சேகரிக்கப்பட்ட உணவுப் பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் கூட இலங்கையில் தமிழ் மக்களுடைய பகுதிக்கு அனுப்ப முடியவில்லை. (23ம் பக்கம் பார்க்க)

# தமிழ்க்கட்சிகளை ஒருங்கிணைப்பது சட்டத்தரணிகளால் முடியுமா?

கொழும்பில் தமிழ் சட்டத்தரணிகள் பேரவை என்ற அமைப்பு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை ஒரு மேசையில் அமர்த்தியிருக்கிறது. அந்தச் சந்திப்பின் விளைவாக வெளிவந்த செய்திகளின்



படியும், உத்தியோகபூர்வ அறிக்கையின் படியும் அரசாங்கம் ஒரு புதிய யாப்பை உருவாக்குமாக இருந்தால் அதைத் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக எதிர்கொள்வது என்று முடிவெடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த முடிவின்படி சமஸ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை நோக்கி உழைப்பது என்றும், அதற்காக இலங்கையில் வாழும் சமூகங்களுக்கு இடையிலான சமூக ஒப்பந்தம் ஒன்றை முதலில் எழுதிக் கொள்ள வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

நல்ல விஷயம். சட்டத்தரணிகளே பெரும்பாலும் தமிழ் அரசியலைக் கையாளும் ஒரு மிதவாதப் பாரம்பரியத்தில், சட்டத்தரணிகளின் அமைப்பு ஒன்று இவ்வாறு கட்சிகளை ஒருங்கிணைக்க முன் வந்திருப்பது சில சமயம் பயன் பொருத்தமாக அமையலாம்.

கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் சிவில் சமூகங்கள் மதத் தலைவர்கள், மறைமுகமாக தூதரகங்கள் போன்ற பல்வேறு தரப்புகள் முயற்சித்திருக்கின்றன. ஆனால் இந்த முயற்சிகள் எவையும் முழுவெற்றி பெறவில்லை மட்டுமல்ல, அண்மையில் சுவிட்சர்லாந்து தூதரகத்தின் அனுசரணையோடு ஏற்பாடாகியிருந்த ஒரு சந்திப்பு பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆண்டு கால ஈழத்தமிழ் அனுபவத்தைத் தொகுத்துப் பார்த்தால் தமிழ்க் கட்சிகளை ஒன்றாக்க வேண்டும் என்ற முயற்சி தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறது. விக்கிரமாதித்தன் – வேதாளம் கதை போல தன் முயற்சியில் மனம்தளராத குடிமக்கள் சமூகங்கள் தொடர்ந்து தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதில் ஒரு தொடர்ச்சியைக் காணலாம். அதேசமயம் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்க வேண்டியதன் அவசியத்தை குடிமக்கள் சமூகங்கள் எப்பொழுதும் உணர்ந்துள்ளன என்பதையும் இது காட்டுகிறது. இது முதலாவது தொகுக்கப்பட்ட அனுபவம்.

இரண்டாவது தொகுக்கப்பட்ட அனுபவம், இந்த முயற்சிகள் எல்லாவற்றையும் ஏதோ ஒரு கட்டத்தில் குழப்பியது பெரும்பாலும் தமிழரசுக் கட்சி தான். அதற்கு பிரதான காரணம் என்னவென்றால், அதுதான் உள்ளதில் பெரிய கட்சி.எனவே தானே முதன்மை வகிக்க வேண்டும் என்று அது எப்பொழுதும் எதிர்பார்க்கின்றது. தானே தலைமை தாங்கும் கட்சி என்றும் அது மார் தட்டிக் கொள்கிறது. அதனால் ஒருங்கிணைப்பு முயற்சிகள் தன்னைப் பலவீனப்படுத்தக் கூடாது என்ற முன்எச்சரிக்கை எப்பொழுதும் அந்தக் கட்சியிடம் உண்டு.

அதைவிட முக்கியமாக, இந்தச் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் சிவில் சமூகங்கள் பெரும்பாலும் கஜேந்திரக்குமாருக்கு நெருக்கமானவை என்றும் தமிழரசுக் கட்சியிடம் ஒரு முற்கற்பிதம் உண்டு. இதில் ஒரு பகுதி உண்மையுண்டு. எனவே தேர்தல்கள் மூலம் தனது முதன்மையை நிரூபிக்க முடியாத தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியானது, சிவில் சமூகங்களுக்கு ஊடாக தன்னை முன்னுக்கு கொண்டுவர முயற்சிக்கிறது என்று தமிழரசுக்கட்சி நம்புகின்றது.

அதனால் கட்சிகளை ஒருங்கிணைக்க முற்படும் சிவில் அமைப்புகளை தமிழரசுக் கட்சி சந்தேகத்தோடு பார்க்கின்றது அல்லது ஒரு வித ஒவ்வாமையோடு பார்க்கின்றது. அதன் விளைவாக அந்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் ஏதோ ஒரு கட்டத்தில் குழப்பப்படுகின்றன. கடைசியாக சுவிட்சர்லாந்து தூதரகத்தின் அனுசரணை முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டதையும் இந்தப் பின்னணிக்குள் வைத்துத் தான் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்க முடியாமல் போனதற்கும் தமிழ் ஐக்கியத்தை பாதுகாக்க முடியாமல் போனதற்கு அடிப்படைக் காரணம் தமிழரசுக் கட்சியின் முடிவெடுக்கும் அதிகாரத்தில் இருப்பவர்கள்தான். அவர்கள் தங்களை முதன்மைக் கட்சி என்று கூறிக் கொண்டால் அவர்கள் தானே அதற்குப் பொறுப்பு? எனவே கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளில் ஈடுபடுகிறவர்கள் முதலில் செய்ய வேண்டியது என்னவென்றால் தமிழரசுக் கட்சிக்குள் தீர்மானிக்கும் அதிகாரத்தோடு இருப்பவர்களை தமது வழிக்குக் கொண்டு வருவது தான். இப்படிப்பட்ட தொகுக்கப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் சிந்தித்தால், இப்பொழுது சட்டத்தரணிகள் அமைப்பு முன்னெடுக்கும் முயற்சிகளில் இரண்டு விடையங்கள் தீர்மானகரமானவைகளாகத் தெரிகின்றன.

முதலாவது இந்த முயற்சியை முன்னெடுக்கும் சட்டத்தரணிகளில் பிரதானிகளாகக் காணப்படுபவர்களுக்கும் கட்சிகளின் முக்கியஸ்தர்களாகக் காணப்படும் சட்டத்தரணிகளுக்கும் இடையிலான உறவு எப்படி இருக்கிறது என்பது. அதிலும் குறிப்பாக சுமந்திரனுக்கும் தமிழ் சட்டத்தரணிகள் பேரவையில் பிரதானிகளாகக் காணப்படுபவர்களுக்கும் இடையிலான உறவு சுமுகமானதா என்பது. ஏனென்றால் அவர்கள் ஒரே துறைக்குரியவர்கள்.

இரண்டாவது விடயம் இதற்கு முன் முன்னெடுக்கப்பட்ட ஒருங்கிணைப்பு முயற்சிகள் தோற்றுப் போனதற்கு ஒரு காரணம்,சிவில் சமூகங்களிடம் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் பலம் இருக்கவில்லை என்பது தான்.தமிழ் சட்டத்தரணிகள் பேரவைக்கு அவ்வாறான சக்தி உண்டா? ஏனென்றால் தனியாக அனுசரணை மட்டும் செய்வதனால் அதாவது சம்பந்தப்பட்ட தரப்புகளை ஓரிடத்தில் உட்கார வைத்து அவர்களுக்கு இடையில் இருக்கக் கூடிய முரண்பாடுகளைத் தீர்க்கும் விடயத்தில் ஓர் இடை நடுவராகச் செயல்படுவது என்பது அனுசரணை மட்டும் தான். இதற்குமப்பால் சில வேளை அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டி வரலாம். அதற்கு ஒரு பலம் வேண்டும். கடந்த 16 ஆண்டுகளிலும் தமிழ்ப் பரப்பில் எந்த ஒரு சிவில் சமூகத்துக்கும் அப்படிப்பட்ட பலம் இருக்கவில்லை.இப்பொழுதும் தமிழ் சட்டத்தரணிகள் பேரவைக்கு அவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிக்கும் சக்தி இருக்கிறதா?

ஒரே துறைக்கு உரியவர்கள் என்பதனால் கட்சித் தலைவர்கள் அவர்கள் சொல்வதை சிலசமயம் செவிமடுக்கலாம். அல்லது தொழில்சார் பொடி பொறாமை, ஈகோக்கள் இதில் செல்வாக்குச் செகுத்தலாம்.ஒரே உறைக்குள் இரண்டு வாள்கள் இருப்பதில்லை

எனவே, மேற்சொன்ன இரண்டு அடிப்படைகளிலும் சிந்தித்தால் தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சி வெற்றி பெறுமா? கடந்த 74 ஆண்டு கால தமிழ்த் தேசிய அரசியலை அப்புக்காத்து அரசியல் அல்லது கறுப்புக் கோட்டு அரசியல் என்று அழைப்பதுண்டு.

ஏனென்றால் சட்டத்தரணிகள் தான் அங்கே பெரும்பாலும் பிரதானிகளாகக் காணப்பட்டார்கள். வாதாடும் திறமையுள்ளவர்கள்தான் நாடாளுமன்றத்தில் வாதாடி தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பார்கள் என்று தமிழ்மக்கள் அப்பாவித்தனமாக நம்பிய காலம் அது. ஆனால் சட்டத்தரணிகளின் அரசியல் கடந்த 75 ஆண்டுகளாக தமிழ் மக்களை எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது?

கட்சிக்குள்ளேயே ஒருவர் மற்றவருக்கு எதிராக வழக்கு போடுவது் தங்களுக்கு எதிராக விமர்சிப்பவர்களை வழக்கு போடுவோம் என்று விரட்டுவது் அல்லது வழக்கு போடுவது போன்ற விடயங்களில்தானே ஒரு பகுதி தமிழ் சட்டத்தரணி அரசியல்வாதிகள் தமது திறமைகளைக் காட்டுகிறார்கள்?

ஆனால் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் உள்நாட்டு நீதியின் விரிவைப் பரிசோதிக்கும் விடயங்களில் இவர்கள் வெற்றிகள் எத்தனை?

ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரான அப்புக்காத்து அரசியலில், தமிழர் விடுதலை கூட்டணி ஒரு முக்கிய அடைவு. தேர்தல் தோல்விகளின் விளைவாக ஏற்பட்ட ஓர் ஐக்கியம் என்று அதுதொடர்பாக விமர்சனங்கள் இருந்தாலும், தமிழ்க் கட்சித் தலைவர்கள் தங்களுக்கு இடையில் ஓர் உடன்பாட்டுக்கு வந்து அவ்வாறு ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரான கடந்த 16 ஆண்டுகளிலும் ஏற்கனவே இருந்த பலமான கூட்டு ஆகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைக்கப்பட்டு விட்டது. தமிழரசுக் கட்சியும் இரண்டாக நிற்கிறது. கடைசியாக நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த அதேயளவு ஆசனங்கள்தான் அரசாங்கத்துக்கும் கிடைத்தன. அது வெற்றி அல்ல.தோல்வி. அதை வெற்றியாகக் கொண்டாடுவது அதைவிடப் பெரிய தோல்வி. இப்படிப்பட்ட ஒரு தோல்விகரமான பின்னணியில ,தாங்களாக இணைய முடியாத தமிழ்க் கட்சிகளை சட்டத்தரணிகளே ஒருங்கிணைக்க முன் வந்திருப்பது வெற்றியளிக்குமா?

# நிகழும் யுத்தத்தில் தமிழ்மக்கள் என்ன நிலைப்பாட்டை எடுக்கலாம்?




1991ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையிலான அணி, ஈராக்கிற்கு எதிராக ஒரு படை நடவடிக்கையை முன்னெடுத்தது. 42நாட்கள் நடந்த இந்தப் படை நடவடிக்கைக்கு அவர்கள் ஒபரேஷன் டிசர்ட் ஸ்ரோம் பாலைவன புயல் என்று பெயர் வைத்தார்கள். குவைத் நாட்டுக்குள் புகுந்த ஈராக்கிய படைகளை அங்கிருந்து அகற்றுவது அந்தப் படை நடவடிக்கையின் நோக்கம்.

இது தொடர்பாக அப்பொழுது யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கருத்தரங்கில் ஆய்வுரை நிகழ்த்தியவர் ஆய்வுரை முழுவதிலும் மத்திய கிழக்கு என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். அப்பொழுது அங்கே பார்வையாளராக வந்திருந்த புத்திஜீவி ஒருவர்–பௌதீகவியலத் தனது அறிவியல் ஒழுக்கமாகக் கொண்டவர். உரை நிகழ்த்தியவரிடம் கேட்டார். ஏன் மத்திய கிழக்கு என்று அழைக்கிறீர்கள்? அது எங்களுக்கு மத்திய கிழக்கு இல்லைத் தானே? அப்படி என்றால் உங்களுடைய ஆய்வு எந்த நோக்கு நிலையிலிருந்து மேற்கொள்ளப்பட்டது? என்று.

அந்தக் கேள்வி மிக ஆழமானது. மத்திய கிழக்கு என்பது பிரித்தானிய குடியேற்றவாத காலத்தில் குடியேற்றவாத நோக்கு நிலையில் இருந்து பிரித்தானிய குடியேற்றவாத அதிகாரி ஒருவரால் 1850ஆம் ஆண்டு பயன் படுத்தப்பட்ட வார்த்தையாகும். பிரித்தானியாவின் நோக்கு நிலையில் இருந்து கிழக்கை அவர்கள் தூரகிழக்கு (Far East), அண்மை கிழக்கு(Near East), மத்திய கிழக்கு(Middle East) என்று பிரித்தார்கள். பின்னர் அந்த வார்த்தை அமெரிக்கரும் கடல்சார் மூலோபாய ஆராய்ச்சியாளரும் ஆகிய அல்பிரட் தாயர் மாகன் என்பவரால் ஆய்வு நோக்குநிலையில் இருந்து 1902இல் பயன்படுத்தப்பட்டு பரவலாக்கப்பட்டது.

ஆனால் அது பிரித்தானிய கொலோனியல் நோக்கு நிலையில்–குடியேற்றவாத நோக்க நிலையில் இருந்து பயன்படுத்தப்பட்ட ஒரு வார்த்தை என்பதனால் அதை நிராகரித்து இந்தியாவின் முதலாவது பிரதமர் ஆகிய ஜவஹர்லால் நேரு மேற்காசியா என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். ஆசிய நோக்கு நிலையிலிருந்து அது ஆசியாவின் மேற்கே காணப்படுவதனால் அவ்வாறு அவர் அழைத்தார்.

எனவே அதை மத்திய கிழக்கு என்று அழைப்பதா அல்லது மேற்காசியா என்று அழைப்பதா என்பது அரசறிவியல் ஒழுக்கத்தின்படி எந்த மையத்திலிருந்து அந்தப் பிராந்தியத்தை நாங்கள் நோக்குகிறோம் என்பதைக் குறிக்கும். எமது அரசியல் நோக்குநிலை எது என்பதை அது காட்டும்.

அரசியலில் வார்த்தைகள் முக்கியமானவை. குறிப்பாக அரசியல், சட்ட ஆவணங்களில் வார்த்தைகளுக்கு வழங்கப்படும் வியாக்கியானம் மிகவும் முக்கியமானது. அதனால் தான் லேபிள் இல்லாத சமஸ்ரியை தமிழ் மக்கள் சந்தேகிக்கின்றார்கள். எக்கிய ராஜ்ய என்ற வார்த்தை விவாதப் பொருள் ஆகியது.

இந்திய தத்துவஞானி ஆகிய ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி வார்த்தைகளில் ஒன்றுமில்லை என்று கூறுவார். அதேசமயம் வார்த்தைகள் அர்த்தங்களால் சுமை ஏற்றப்படுகின்றன என்றும் கூறுவார். வார்த்தைகள் அவற்றை உருவாக்குபவர்கள் அல்லது பயன்படுத்துபவர்களின் நோக்கு நிலையில் இருந்து வெவ்வேறு அர்த்தப் பரிமாணங்களைக் கொண்டிருக்கும்.

இப்பொழுது நிகழ்காலத்துக்கு வருவோம். ஈராக்குக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தொடுத்திருக்கும் போர் நடவடிக்கை தொடர்பாக உரையாடுகின்ற பலரும் மத்திய கிழக்கு என்ற வார்த்தையைத்தான் பயன்படுத்தக் காணலாம். ஆசியர்கள் ஆகிய நாம் அதனை ஆசிய நோக்கு நிலையில் இருந்து மேற்காசியா என்று அழைப்பது தான் பொருத்தமானது.

இந்த அடிப்படையில் பார்த்தால் இந்த போரில் ஆசியர்கள் ஆகிய நாம் யாருடைய பக்கம் நிற்க வேண்டும்? சண்டையிடும் நாடுகளில் இரண்டு ஆசிய நாடுகள். ஒன்று அமெரிக்க கண்டம். எனவே இரண்டு ஆசிய நாடுகள் பொருதும் ஒரு களத்தில், ஆசியாவில் வாழும் சிறிய அரசில்லாத தமிழ் மக்கள் எப்படிப்பட்ட முடிவை எடுக்கலாம்?

தமிழ் மக்களின் முடிவு இந்த போரில் தாக்கத்தை ஏற்படுத்துமா இல்லையா என்று சிலர் கேள்வி கேட்கக்கூடும். பிரச்சினை என்னவென்றால், தன்னைச் சுற்றி நிகழும் எல்லா திருப்பகரமான நிகழ்வுகள் குறித்தும் ஒரு மக்கள் கூட்டம் குறிப்பாக விடுதலைக்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டம் தனக்கென்று சொந்த நிலைப்பாட்டை கொண்டிருக்க வேண்டும். அந்த அடிப்படையில் நீதிக்காகப் போராடும் தமிழ் மக்கள் இந்தப் போரில் யாருடைய பக்கம் நிற்க வேண்டும்?

அறம்,நீதி நியாயங்களின் அடிப்படையில் சிந்திக்கும் தமிழர்கள் ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடும் ஈரானியர்களின் பக்கம்தான் தமிழர்கள் நிற்க வேண்டும் என்று கருதுகிறார்கள்.

அதேசமயம் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் ஈரானின் பக்கம் நிற்பதற்குத் தயாரில்லை. ஏனென்றால் இறுதிக்கட்டப் போரில் ஈரான் அரசாங்கத்தின் பக்கம் நின்றது என்று அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

இங்கே ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். இறுதிக் கட்டப் போரில் ஈரான் மட்டுமல்ல, பாகிஸ்தான் மட்டுமல்ல, இஸ்ரேல் மட்டுமல்ல, உலகின் பெரும்பாலான நாடுகள் தமிழ் மக்களுக்கு எதிராகத்தான் நின்றன. ஆதரவாக நிற்பது போல தோன்றிய சில ஐரோப்பிய நாடுகளும் ஆபிரிக்க நாடுகளும் கூட இன அழிப்பிலிருந்து தமிழ் மக்களை காப்பதற்கான நிர்ணயகரமான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. உலகப் பெருமன்றம் ஆகிய ஐநாவுந் தான்.

கடந்த 16 ஆண்டுகளாக, ஐநாவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகையில் அரபு நாடுகள் மட்டுமல்ல சுதந்திரத்துக்காகப் போராடி வெற்றி பெற்ற கியூபா, எரித்திரியா, வியட்நாம் போன்ற நாடுகளும் அரசாங்கத்தின் பக்கந்தான் நிற்கின்றன. எனவே இங்கு முக்கியமாகக் கேட்கப்பட வேண்டிய கேள்வி, எந்த அடிப்படையில் இந்த நாடுகள் இலங்கை அரசாங்கத்தோடு நிற்கின்றன? அல்லது ஈழத் தமிழர்களுக்கு எதிராக நிற்கின்றன? என்பதுதான்.

விடை அதிகம் சிக்கலானது அல்ல. அது அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவு. அரசுகள் அரசுகளை பாதுகாக்கின்றன. அரசுக்கும் அரசுக்கும் இடையிலான நிலையான நலன்களின் அடிப்படையில் அந்த உறவு அமைகிறது. அரசுகள் தங்களுடைய ராணுவப் பொருளாதார அரசியல் நோக்கு நிலைகளில் இருந்து அந்த முடிவை எடுக்கின்றன. அங்கே அறம் நீதி எதுவும் கிடையாது. அவை யாவும் அம்புலி மாமா கதைகளில்தான் உண்டு.

இந்த அடிப்படையில் கூறின் உலகில் உள்ள எல்லாப் பேரரசுகளின் கைகளிலும் தமிழ் மக்களுடைய ரத்தம் உண்டு. சிறிய அரசுகளின் கைகளிலும் உண்டு. 400 ஆண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கீசர் தமிழ் மக்களின் அரசைத் தோற்கடித்தார்கள். அங்கிருந்து தொடங்கி எல்லா குடியேற்றவாத நாடுகளும் தமிழ் மக்களின் அரசை இல்லாமல் செய்தன.

தமிழ் மக்கள் சுதந்திரத்துக்காக போராடத் தொடங்கிய போது முதலாம் கட்ட ஈழப்போரில் மேற்கு நாடுகள் தமிழ் மக்களுக்கு எதிராக நின்றன. இந்தியா அப்பொழுது தமிழ் மக்களோடு நின்றது. இரண்டாம் கட்ட ஈழப் போரில் இந்தியா தமிழ் மக்களுக்கு எதிராகத் திரும்பியது. மூன்றாவது, நாலாவது கட்ட ஈழப் போர்களில் உலகில் பெரும்பாலான நாடுகள் உத்தியோகபூர்வமாக அரசாங்கத்தோடு தான் நின்றனன்.

இங்கே எந்த நாடு தமிழ் மக்களோடு நிற்கிறது அல்லது எதிராக நிற்கிறது என்பது. அந்த நாட்டுக்கு தமிழ் மக்கள் மீதுள்ள காதல் பாசம் என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை. பிராந்திய மற்றும் பூகோள அரசியல் நோக்கு நிலைகளில் இருந்து நமது நிலையான நலன்கள் தேவைகளின் அடிப்படையில் அரசுகள் தமிழ் மக்களை ஆதரிப்பதா இல்லையா என்ற முடிவை எடுக்கின்றன.

குறிப்பாக தமிழ் மக்கள் அரசு இல்லாத தரப்பாக இருப்பதனால் அரசுடைய தரப்பாகிய சிங்கள மக்களைதான் நாடுகள் கட்டமைப்பு சார்ந்து கையாளும். அதாவது கொழுப்பைக் கையாள்வது. கொழும்பைக் கையாள முடியாது போகும் போது தமிழ் மக்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தி கொழும்பை வழிக்குக் கொண்டு வருவது. இந்த அடிப்படையில் தான் ஈழத் தமிழர்களுக்கும் உலக சமூகத்திற்கும் இடையிலான உறவு பெரும்பாலும் தீர்மானிக்கப்படுகிறது. இனிமேலும் தீர்மானிக்கப்படும். கொழும்பைப் பகைத்துக் கொண்டு ஈழத் தமிழர்களை ஆதரிப்பதற்கு குறிப்பிட்ட ஒரு நாட்டுக்கு இந்த பிராந்தியத்தில் புவிசார் அரசியல் நோக்கு நிலையில் இருந்து தேவை இருக்க வேண்டும். தேவை இல்லையென்றால் அந்த நாடு அரசுக்கும் அரசுக்கும் இடையிலான பாரம்பரியமான உறவு முறையைத்தான் கடைப்பிடிக்கும்.

அந்த அடிப்படையில் தான் வெளி அரசுகள் ஈழத் தமிழர்களை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்ற முடிவை எடுக்கின்றன. இங்கே அறம் நீதி என்பவை கிடையாது. நிலையான அரசியல், ராணுவ, பொருளாதார நலன்கள் மட்டும் தான் உண்டு. எனவே ஈழத் தமிழர்களும் நீதிக்கான தமது போராட்டத்தின் நோக்குநிலையில் இருந்துதான் வெளி அரசுகளோடு உறவுகளை வைத்துக் கொள்ளலாம். அப்பாவித்தனமாக நீதி நியாயங்களின் அடிப்படையில் அல்ல.

இக்கட்டுரையை சொற்களின் அர்த்தங்களில் இருந்து தொடங்கியது போல, முடிக்கும் போதும் அது தொடர்பாக அமெரிக்க எழுத்தாளரான ஏர்னஸ்ற் ஹெமிங்வே எழுதிய கருத்தைக் கூறி முடிக்கலாம். ஹெமிங்வே எழுதிய “A farewell to Arms” (1929) – போரே நீபோ என்ற நாவல் உலகப் பிரபல்யமானது. முதலாம் உலகப் போர்ச் சூழலுக்குள் சிக்கிய இளம் தம்பதி ஒன்றின் கதை அது. அந்த நாவலின் இறுதிக் கட்டத்தில் கதாநாயகன் பின்வரும் பொருள்படக் கூறுவான்..

சில வார்த்தைகள் இப்பொழுது புனிதமிழந்து விட்டன. சமாதானம், யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை.. போன்ற வார்த்தை களுக்குப் பொருளே இல்லை. புனிதமும் இல்லை. இதில் பொருள் கொடாமலிருக்கும் வார்த்தைகள் எவை என்று பார்த்தால் படைப்பிரிவின் பெயர்கள், ரெஜிமென்ட்களின் பெயர்கள், வீதிகளின் பெயர்கள் மட்டுந்தான்.

முதலாம் உலகப் போருக்குப் பின் அந்த அமெரிக்க எழுத்தாளர் கூறியது இப்பொழுதும் பொருந்துகிறது என்பது தான் மனித குலத்தின் துயரம்.

–– நிலாந்தன் –

# அமெரிக்கா இஸ்ரேலுக்குப் பின்னால் இழுபடுவதை விடுத்து ஆபத்தான போரில் இருந்து விலக வேண்டும்!



அமெரிக்க இஸ்ரேலிய கூட்டுத் தாக்குதலில் அதியுயர் ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா அலி காமெனி பெப்ரவரி 28 ஆம் திகதி கொல்லப்பட்டதை தொடர்ந்து புதிய ஆன்மீகத் தலைவராக அவரது மகன் அயத்தொல்லா மொஜ்தாபா காமெனியை தெரிவு செய்ததன் மூலமாக, முன்னைய ஆட்சியின் தொடர்ச்சியை உறுதி செய்திருப்பதுடன் அமெரிக்காவுக்கும் மேற்குலகிற்கும் எதிராக துணிச்சலையும் வெளிக்காட்டியிருக்கிறது.

ஈரான் நிபந்தனையற்ற முறையில் சரணடைய வேண்டும் என்று கடந்த வாரம் கேட்டுக் கொண்டதன் மூலமாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இளம் காமெனியின் தெரிவு தனக்கு ஏற்புடையதல்ல என்பதை தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் 88 இஸ்லாமிய மதத் தலைவர்களைக் கொண்ட ஈரானின் நிபுணர்கள் குழு பெப்ரவரி 28 தாக்குதலில் தனது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களை இழந்த 57 வயதான மொஜ்தாபா காமெனியை ' ஈரானியப் புரட்சியின் ' புதிய தலைவராகத் தெரிவுசெய்தது.

ஈரானுக்கும் ஈராக்கிற்கும் இடையிலான போரில் முன்னரங்கத்தில் நின்று போரிட்டவரும் குவாம் நகரில் உள்ள மதக்கல்விக் கூடங்களில் இஸ்லாத்தை கற்றவருமான மொஜ்தாபா காமெனி இஸ்லாமியப் புரட்சிகரக் காவலர் படையுடனும் இஸ்லாமிய மதத் தலைவர்களின் கட்டமைப்புடனும் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்திருக்கிறார்.

அவரை நாட்டின் அதியுயர் ஆன்மீகத் தலைவராக தெரிவு செய்ததன் மூலம் தெஹ்ரான் போருக்கு மத்தியிலும் இஸ்லாமியக் குடியரசு உறுதியாக நிற்கிறது என்ற சந்தேகத்துக்கு இடமற்ற தெளிவான செய்தியைக் கூறியிருக்கிறது. அயத்தொல்லா காமெனியையும் உயர்மட்ட படைத் தளபதிகளையும் கொலை செய்த தனது ஆரம்பக் கட்ட செயல் இஸ்லாமிய அரசின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்று டொனால்ட் ட்ரம்ப் நம்பியிருந்தால், அவரது மதிப்பீடு தவறானது.

பதிலாக, அரசின் சகல கிளைகளும் இராணுவத்துக்கும் மதத் தலைவர்களுக்கும் பின்னால் அணிதிரண்டு நிற்கின்ற அதேவேளை, பாரசீக வளைகுடாவில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மற்றும் எரிசக்திக் கட்டமைப்புக்கள் மீதும் இஸ்ரேல் மீதும் தாக்குதல்களை நடத்தியதன் மூலமாக போரை ஈரான் பிராந்திய அளவில் பரவலாக்கியிருக்கிறது.

இப்போது புதிய ஒரு காமெனி அதிகாரத்தில் இருக்கிறார் எரிசக்தி விலைகள் வானளாவ உயர்ந்துசென்று கொண்டிருக்கின்றன அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் தலைவர்கள் போரில் இருந்து வெளியேறுவதற்கான தந்திரோபாயங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இது முற்றிலும் அநாவசியமான போர். தெஹ்ரானுக்கும் வாஷிங்டனுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தத்தில் ஈடுபட்டிருந்த ஓமான் அணு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படும் தறுவாயில் இருக்கிறது என்று கூறிய சில மணித்தியாலங்களில் இஸ்ரேலும் அமெரிக்காவும் தாக்குதலகதை ஆரம்பித்தன. போரின் இலக்குகள் குறித்து டொனால்ட் ட்ரம்ப் மாறி மாறி ஒவ்வொரு நிலைப்பாடுகளை அறிவித்துக் கொண்டிருந்தார்.

ஈரானிய அரசைத் தூக்கியெறிவதே தனது இலக்கு என்று முதல் நாள் கூறிய அவர் ஐந்தாம் நாள் ஈரானின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதில் தன்னைச் சம்பந்தப்படுத்த வேண்டும் என்றார். பிறகு பதினோராம் நாள், இஸ்ரேல் மீதும் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களை சரமாரியாக தொடுத்துக் கொண்டிருந்த நிலையிலும் கூட அமெரிக்கா போரை ஏற்கெனவே வென்றுவிட்டது என்றும் விரைவில் போர் முடிவுக்கு வந்துவிடும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவிடமும் இஸ்ரேலிடமும். மாபேரளவில் விமானப்படைப் பலம் இருக்கிறது என்பதும் தொடர்ந்து அவை ஈரான் மீது குண்டுமாரி பொழியும் என்பதும் உண்மை. பெப்ரவரி 28 அமெரிக்க ஏவுகணைகள் பெண்கள் பாடசாலை ஒன்றைத் தாக்கியதில் 160 க்கும் அதிகமான மாணவிகள் கொல்லப்பட்டதாக சுயாதீனமான விசாரணைகள் மூலம் தெரியவந்திருக்கிறது. கடந்த வாரம் இஸ்ரேல் ஈரானின் எண்ணெய்க் களஞ்சிய வசதிகள் மீது நடத்திய தாக்குதல்களை தொடர்ந்து தெஹ்ரான் கரும்புகையினால் சூழப்பட்டிருக்கிறது.

ஆனால், தெளிவாகச் சாதிக்கக் கூடிய அரசியல் இலக்குகள் இல்லாமல் மக்கள் மீது தொடர்ந்து குண்டு வீச்சுக்களை நடத்துவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? இதே மக்களைத்தான் '. விடுதலை' செய்யப் போதாக சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்கா உறுதியளித்தது.அரசியல் பகுப்பாய்வு

ஈரானிய அரசு சுருண்டு போய்விடவில்லை. அது எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கிறது. டொனால்ட் ட்ரம்பும் பெஞ்சமின் நெதான்யாகுவும் இந்தப் போரைத் தொடருவார்களேயானால், உலகப் பொருளாதாரம் மேலும் கடுமையான நெருக்குதலுக்கு உள்ளாகும். அவர்கள் இருவரும் தங்களது பாரதூரமான தப்புக்கணக்கை விளங்கிக் கொள்கிறார்களோ இல்லையோ, மேலும் குண்டுவீச்சுக்களைத் தொடருவது முன்னோக்கிய பாதை அல்ல . இந்தப் போர் உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். (தி இந்து ஆசிரிய தலையங்கம்)

# ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க உதவாவிடின் நேட்டோ அமைப்பு மிக மோசமான எதிர்காலத்தைச் சந்திக்கும்!

(14ம் பக்கத் தொடர்ச்சி) அதிகாரப்பூர்வ எக்ஸ் கணக்கு, பிரான்ஸ் ஹோர்முஸ் நீரிணைக்குப் போர்க் கப்பல்களை அனுப்புவதாக வெளிவந்த செய்திகளை மறுத்துள்ளது. பிரான்ஸ் அதிபர் மக்ரோங் திங்கள`று எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், இரானிய அதிபர் மசூத் பெசெஷ்கியனுடன் பேசியதாகத் தெரிவித்தார்.

இப்பகுதியில் உள்ள மற்ற நாடுகளுக்கு எதிரான தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு இரானுக்கு நான் அழைப்பு விடுத்துள்ளேன். பிரான்ஸ் தற்போது தனது நலன்கள், இப்பகுதியில் உள்ள தனது நட்பு நாடுகளின் நலன்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் தற்காப்பு நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கிறது என்பதையும், எங்கள் நாட்டிற்கு எதிரான தாக்குதல்களைப் பொறுத்துக் கொள்ள மாட்டோம் என்பதையும் நான் நினைவு படுத்தினேன். ஹோர்முஸ் நீரிணையில் தடையற்ற கப்பல் போக்குவரத்து உடனடியாக மீட்டெடுக்கப்பட வேண்டும்' என்று அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

தென் கொரியா: மத்திய கிழக்கில் நடைபெற்று வரும் மோதல்களைத் தாங்கள் 'நெருக்கமாகக் கண்காணித்து' வருவதாகத் தென் கொரியா அரசாங்கம் திங்களன்று தெரிவித்துள்ளது. வெளியுறவு அமைச்சகம், 'கொரிய குடிமக்களைப் பாதுகாக்கவும், எரிசக்தி போக்குவரத்துப் பாதைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் தென் கொரியா பல்வேறு வாய்ப்புகளைப் பரிசீலித்து வருகிறது,' என்று தெரிவிததுள்ளது.

ஆஸ்திரேலியா: ''ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறக்க உதவுவதற்காக போர்க்கப்பல்களை அனுப்ப மாட்டோம். ஹோர்முஸ் நீரிணையின் முக்கியத்துவம் எங்களுக்கு தெரியும். உதவிக்காக எங்களை யாரும் கோரவில்லை. நாங்கள் எந்த உதவியும் வழங்கவில்லை,' என அமைச்சர் கேத்ரின் கிங் அரசின் ஒளிபரப்பு சேவையான ஏபிசிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்


## இந்தியக் கப்பல்களுக்கு பாதுகாப்பான பயணம் ஈரான் விடுத்துள்ள முக்கியமான கோரிக்கை!

மத்திய கிழக்கில் உருவாகியுள்ள பதற்றமான சூழ்நிலையில், ஈரான் அரசு இந்தியாவிடம் மூன்று எண்ணெய் கப்பல்களை திருப்பி தர வேண்டும் எனக் கோரியுள்ளது. இந்தியா கைப்பற்றியுள்ள அந்த எண்ணெய் கப்பல்களை விடுவித்தால் ஹார்முஸ் நீரிணையில் இந்திய கப்பல்களுக்கு பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதாக ஈரான் தெரிவித்துள்ளது.


ஹார்முஸ் நீரிணை உலகின் முக்கியமான எண்ணெய் போக்குவரத்து பாதையாகும். அமெரிக்கா-இஸ்ரேல் போர் காரணமாக, ஈரான் அந்த கடல்பாதையை மூடியதால், உலகளாவிய எண்ணெய் விலை பீப்பாய்க்கு 100 டொலர் வரை உயர்ந்துள்ளது. இதனால், இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் கடுமையான பாதிப்பை சந்தித்து வருகின்றன. இந்தியாவால் கைப்பற்றப்பட்ட மூன்று எண்ணெய் கப்பல்களை விடுவிக்க வேண்டும் என்ற ஈரானின் கோரிக்கை, பரிமாற்ற ஒப்பந்தம் போலக் கருதப்படுகிறது. அதாவது, எண்ணெய் கப்பல்களை திருப்பி கொடுத்தால், இந்திய கப்பல்களுக்கு ஹார்முஸ் கடல்சாலையில் பாதுகாப்பான பயணம் கிடைக்கும். இந்த நிலைமை, இந்தியாவின் வெளிநாட்டு கொள்கைக்கும், உலகளாவிய வர்த்தகத்திற்கும் முக்கியமான சவாலாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

EELANADU 20 Mar 2026 ஈழநாடு


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! வழக்குகளில் சாதகமான சூழல் ஏற்படும். ஆக்கபூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். தெளிவான மன நிலை இருக்கும். செயல்திறன் அதிகரிக்கும் நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள்.





ரிஸபராசி அன்பர்களே! பக்குவமான அணுகு முறையினால் எல்லா காரியங்களிலும் வெற்றி பெறுவீர்கள். செயல்திறமை அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் பணிசுமை குறைந்து காணப்படும்.





மிதுனராசி அன்பர்களே! புத்தி சாதுரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பேச்சாற்றல் மூலம் தொழில் லாபம் கூடும்.





கடகராசி அன்பர்களே! பணிச் சுமை அதிகரிக்கும். எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமதமாகும். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பணவரத்து எதிர்பார்த்த நேரத்தை விட தாமதமாக வந்து சேரும். பூர்வீக சொத்துக்களில் இருந்து பிரச்சனைகள் தீரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக வேலைகளை செய்வது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! சுணக்க நிலையில் இருந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். மன சஞ்சலம் நீங்கும். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்பட்டு நீங்கும்.




கன்னிராசி அன்பர்களே! சொந்த பந்தங்களுக்குள் இணக்கம் ஏற்படும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன்கோபம் குறையும். பணவரத்து அதிகரிக்கும். மனதில் புதுதெம்பும் உற்சாகமும் தோன்றும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். குடும்பத்தில் அமைதி எற்படும்.





துலாம் ராசி அன்பர்களே! திடமான நம்பிக்கையுடன் எதையும் செய்வீர்கள். எதிலும் சாதகமான நிலை காணப்படும். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவிசாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள்





விருச்சிகராசி அன்பர்களே! சோதனைகளையும், தடைகளையும் தகர்த்தெறிவீர்கள். எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்னைகள் குறையும்.








தனுசுராசி அன்பர்களே! கடின உழைப்பினால் வெற்றி பெறுவீர்கள். எதிலும் முன்னேற்றம் காணப்படும். இஷ்டத்திற்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப் பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம்.




மகரராசி அன்பர்களே! நிதான போக்கைக் கடைபிடித்து வெற்றி பெறுவீர்கள். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல் படுவது நல்லது. சுலபமாக முடிந்து விடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த இழுபறி அகலும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம்.




கும்பராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். ஆயுள் அபிவிருத்தி பெறுவதற்கான வகையில் நற்செயல்கள் இருக்கும். தந்தை வழி சார்ந்த உறவினர்கள் தங்களுக்கு தேவையான உதவிகளை உங்களிடம் கேட்டு பெறுவார்கள். குடும்பத்தினர் மகிழ்ச்சிக்காக சுபமங்களச் செலவுகளை செய்யும் வாய்ப்புகள் உருவாகும்.




மீனராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். உறவினர்களுடன் பேசும் போது கவனமாக பேசுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழர் அரசியல் பதிலில்லாத கேள்விகள்!

(17ம் பக்கத் தொடர்ச்சி) இது விடுதலைக்கான அரசியல் முன்னெடுப்புச் சனங்களை மறுபடியும் ஆட்சியாளர்களின் — அடக்குமுறையாளர்களின் காலடியில் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறது. விடுதலைக்கான அரசியல் என்றால் என்ன?

அது பொறுப்புடையது. மக்களுக்கானது. தன்முனைப்பற்றது. தோற்றுப் போனவர்களை மீள்நிலைப்படுத்தி, எழுந்து நிற்க வைப்பது. சர்வதேசப் பரிமாணங்களோடு ஒன்றிணைப்பது. புத்தாக்கத்தை உடையது. கற்பனைகளிலிருந்தும் கோமாளித்தனங்களிலிருந்தும் தவறுகளிலிருந்தும் பலவீனங்களிலிருந்தும் தோல்விகளிலிருந்தும் படிப்பினைகளைப் பெற்று, நிலைப்படுவது. யதார்த்தத்தை உணர்ந்து செயற்படுவது. தமிழர்களின் அரசியல் அப்படியா உள்ளது? தமிழ் அரசியற் தலைவர்கள் அப்படியா செயற்படுகிறார்கள்?

வீழ்ந்து பட்ட சமூகங்களிலிருந்து உருவாகிய சிந்தனையாளர்கள், அந்தச் சமூகங்களை மீள் நிலைப்படுத்துவதற்கான தமது பங்களிப்புகளைச் செய்திருக்கிறார்கள். நம்மிடையே அவ்வாறான சிந்தனையோடு உருவாகிய ஒருவர்?

யதார்த்தத்தை உணர்ந்து செயற்படுவது பாதிக்கப்பட்ட போராடும் இனங்களின் சமூகங்களின் அரசியற் தலைவர்களின் பணி. அத்தகைய தலைவர்கள்? விடுதலைக்கான அரசியலை முன்னெடுப்பதற்கான அடிப்படைகளையும் அவற்றின் பண்பையும் பொறுப்புகளையும் ஊடகங்கள் விவாதித்து நெறிப்படுத்த வேண்டும். அத்தகைய பண்பைக் கொண்டு பொறுப்புடன் செயற்படும் ஊடகங்கள்?

வாய்ப்புகள் எப்போதும் எந்தச் சூழலிலும் உண்டு. சில சந்தர்ப்பங்களில் தானாகவே உருவாகி வரும் வாய்ப்பு. அதைச் சரியாகப் புரிந்து கொண்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சில சூழலில் நாம்தான் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இரண்டும் இணைந்ததே அரசியல் வேலைத்திட்டம். வருகின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தும் திறனற்றவர்களாகவும் (குழப்பம்,தயக்கம், தடுமாற்றம்) புதிய வாய்ப்புகளை உருவாக்க முடியாதோராகவுமே தமிழ்த் தலைமைகளும் கட்சிகளும் உள்ளன.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களின் அரசியலை ஊன்றிக் கவனித்தும் ஆராய்ந்தும் வருகிறேன். சமவேளையில் வெளியுலக அரசியலையும். இரண்டையும் தொகுத்தும் வகுத்தும் சேர்த்தும் விலக்கியும் பார்க்க வேண்டியது அவசியம். அப்படிப் பார்க்கும்போது ஈழத்தமிழர்களின் அரசியல் கோமாளித்தனங்களையும் மூடத்தனத்தையுமே காணக்கூடியதாக இருக்கிறது. உலக அரசியல், பிராந்திய அரசியல் போன்றவற்றில் ஏற்பட்டிருக்கின்ற — ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற மாற்றங்களையும் வளர்ச்சியையும் தமிழ்த்தரப்பு ஏன் புரிந்து கொள்ளத் தவறுகிறது? தனக்குள் ஏன் அது கட்டுண்டு, உளக் கோளாறுக்கு ஆளாகியுள்ளது? என்ற கேள்விகள் எழுகின்றன. குறைந்த பட்சமாக தமது கட்சிகளைச் சீரமைப்புச் செய்ய வேண்டும் என்பதை, புதிய நிலைப்பாட்டை பொருத்தமான முறையில் வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதை, சமூக, உலக மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அதற்கேற்ப நாமும் நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை ஏன் புரிந்து கொள்ள மறுக்கின்றனர்?

# ஈழ ஆதரவு அரசியல் என்றால் என்ன?

(23ம் பக்கத் தொடர்ச்சி) வலுவோ, சட்ட ஆற்றலோ தமிழ் நாட்டுக்கு இல்லை. உதாரணமாக ஈழ யுத்தத்திற்குப் பிறகு (2009) தமிழ்ப்பகுதிகளில் (வடக்குக் கிழக்கு மாகாணங்களில்) பௌத்தமயமாக்கல் தீவிரமடைந்துள்ளது? தமிழ்நாட்டினால் அல்லது இந்திய மத்திய அரசினால் என்ன செய்ய முடிந்திருக்கிறது? அல்லது என்ன செய்ய முடியும்? விடுதலைப் புலிகள் இல்லாத கடந்த 16 ஆண்டுகாலத்தில் ஏன் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முடியவில்லை? அதற்கான அழுத்தத்தை ஏன் கொடுக்க முடியாதிருக்கிறது?

எந்த அரசியல் நாடகத்துக்கும் ஒரு எல்லை உண்டு. பாதிக்கப்பட்ட மக்களை மேலும் பாதிப்படையச் செய்வது அரசியல் அல்ல. அதற்கு விடுதலை அரசியல் என்று பெயரைச் சூட்டுவது கேவலத்திலும் கேவலம்.

# போரில் வெற்றியும் தோல்வியும்

(16ம் பக்கத் தொடர்ச்சி) தாண்டி, இன அழிப்பையும் தாண்டி பலஸ்தீன மக்கள் தங்கள் இலக்கில் தளரவில்லை, விடுதலை வேட்கைக்கான பற்றை சிறிதளவும் இழக்கவில்லை என்றால் வென்றது இஸ்ரேலா? பலஸ்தீனமா?

இப்போது இந்த வரலாற்று பாணியில் ஈரான் மீதான அடக்குமுறை யுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய வெளிப்படையான ஆதரவுடன் நேட்டோவின் மறைமுகமான முதுகுப்பக்க பலத்துடன் அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரான் மீது தொடுத்த போர் இது. இதில் அமெரிக்க கூட்டணியின் இலக்கு ஈரானில் ஆட்சி மாற்றம். அணுவாயுத அழிப்பு வெறும் கண்துடைப்பு. ஆனால் அந்த ஆட்சி மாற்றம் எவ்வாறு அமையும், பிரதியீடு யார் என்பதில் ஈரான் எதிராளிகள் இடையே இன்னும் தெளிவில்லை.

இந்த போரின் ஆரம்பத்தில் இஸ்லாமிய புரட்சியின் மூலம் பதவி நீக்கப்பட்ட ஷா மன்னரின், அமெரிக்கா வாழ் மகனின் பெயருக்கு இருந்த ஆதரவு புகலிட நாடுகளிலும், ஈரானிலும் காணாமல் போய்விட்டது. பல ஆய்வாளர்கள் ஷாவின் காலத்து ஆட்சியை எதிர்மறையாக இன்னும் நினைவு கூறுகிறார்கள். இஸ்லாமிய புரட்சிகர ஆட்சியதிகாரத்திற்கான பொருத்தம் மாற்றுத்தலைமையை ஈரானுக்கு உள்ளேயும், வெளியேயும் அமெரிக்காவினால் இன்னும் அடையாளப்படுத்த முடியவில்லை. இது ஆட்சிக் கவிழ்ப்பு அமெரிக்க இலக்கின் மிகப்பெரிய பலவீனம். கொமேய்னியின் கொலைக்கு பின்னர் ஈரான் அமைதியாக இருக்கிறது. இது புயலுக்கு முன்னான அமைதியா...?

வளைகுடாவில் அமெரிக்கா எதிர்பாராத வகையில் ஈரான் அமெரிக்க நட்பு நாடுகள் மீது நடாத்திய- நடத்தும் தாக்குதல்கள் உலகப் பொருளாதாரத்தில் பொரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஹர்முஸ் பயணப்பாதை இன்னும் ஈரானின் கட்டுப்பாட்டில் இருப்பது பிட்டுக்கு மண் சுமந்த கதை போன்று கருவறையில் வளரும் கருவைக்கை கூட தாக்கும் நிலையில் உலகப்பொருளாதாரத்தை அசைத்து இருக்கிறது. வளைகுடா நாடுகளின் பொருளாதாரம் பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளது. அவை அமெரிக்காவிடம் இருந்து விலகியிருப்பதை காட்ட முயற்சிக்கின்றன. ஆனால் ஈரான் அதை நம்பத் தயாரில்லை. இந்த போரில் மூழ்கடிக்கப்பட்ட போர்க்கப்பல்களோ, சுட்டு வீழ்த்தப்பட்ட விமானங்களோ, ஈரான் அதி உயர் மதத்தலைவர் கொமேய்னியின் இழப்போ, கொன்று குவிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஈரான் மக்கள் தொகையோ போரின் முடிவை தீர்மானிக்க போதுமானவை அல்ல.

# ஈழ ஆதரவு அரசியல் என்றால் என்ன?

(18ம் பக்கத் தொடர்ச்சி) அதற்கான ஏற்பாட்டையும் அனுமதியை யும் இந்திய மத்திய அரசே செய்திருக்க வேண்டும். அது நடக்கவில்லை. ஆக, தார்மீக உணர்வு அடிப்படையில் மட்டும் தான் ஆதரவுக் குரலைக் கொடுக்க முடியும். கியூபாவுக்கு ஆதரவாக, குர்திஸ்க்கு ஆதரவாக, பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக குரல் கொடுப்பதைப் போல. அல்லது இந்திய மத்திய அரசின் ஆதரவுடன் நிவாரணப் பொருட்களை மட்டு அனுப்பி வைக்க முடியும். அவ்வளவு தான்.

அதற்கு அப்பால் செல்ல வேண்டுமானால் அது இந்திய மத்திய அரசுடன் தொடர்புபட்டதாக இருக்க வேண்டும். இந்திய மத்திய அரசின் முடிவுகள் தீர்மானங்கள் – இந்திய வெளியுறவுக் கொள்கை, பிராந்திய நிலவரம், இந்தியப் பாதுகாப்பு, இந்திய நலன் போன்றவற்றை உள்ளடக்கியது. இந்த அடிப்படையை மனதிற்கொண்டே மத்திய அரசின் தீர்மானங்கள் அமையும். இது தான் நடந்து கொண்டுமிருக்கிறது.

இதை மீறி மத்திய அரசு தீர்மானங்களை எடுக்கப் போவதில்லை. பா.ஜ.க மட்டுமல்ல எந்தத் தரப்பு ஆட்சியில் இருந்தாலும் இதுதான் நடக்கும். இதுதான் நிலவரம். இதெல்லாம் தமிழகத்தின் அரசியல் தலைவர்களுக்கும் அறிவுபூர்வமாக அரசியல் பகுப்பாய்வைச் செய்வோருக்கும் அரசியல் விமர்சகர்களுக்கும் தெரியாது என்றில்லை. பலரும் இதைத் தெரிந்து கொண்டே விளையாடுகிறார்கள். சிலர் மட்டுமே உண்மையைச் சொல்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற உண்மைக்கு மதிப்பில்லை. பொய்யை, கற்பனையை நம்புகின்ற மக்களே அதிகமாக உள்ளனர். தமிழ் நாட்டிலும் இதுதான் நிலவரம். ஈழத்திலும் அப்படித் தான் உள்ளது. ஆனால், இந்த விளையாட்டுகளுக்கு ஈழத்தமிழர்களே விலையைக் கொடுக்கிறார்கள். அவர்கள் சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திணறுகிறார்கள். ஆகவே இது ஒரு அபாய விளையாட்டு. அரசியல் தவறு. அநீதியான செயல். கண்டனத்துக்குரிய விடயம்.

ஆனால், ஒரு காலம் ஈழப்போராட்டத்துக்கும் ஈழப் போராளிகளுக்கும் தமிழ்நாடு முழு மனதோடு உதவியது; ஆதரவு நல்கியது. 1970களின் பிற்பகுதியிலிருந்து1980கள் வரையில். அந்தக் காலத்தில் மாநில அரசு, அதனுடைய காவல்துறை தொடக்கம், தமிழகத்தின் அரசியற் கட்சிகள், அரசியல் தலைவர்கள், மாணவர்கள், மக்கள், வணிகர்கள், வண்டி ஓட்டுநர்கள், தெருவோர உணவுக் கடைக்காரர்கள், கிராமங்களில் விவசாயிகள், பண்ணைகள் வைத்திருப்போர், மீனவர்கள், எழுத்தாளர்கள், சினிமாத்துறையினர் எனச் சகலரும் ஈழப்போராட்டத்தையும் ஈழப்போராளிகளையும் ஆதரித்தனர். இந்த ஆதரவைச் சரியான முறையில் பேணி, போராட்டத்துக்கு ஏற்றவாறு வளர்த் தெடுப்பதற்குப் பதிலாக அதைப் பழாக்கிச் சிதைத்ததில் பெருந்தவறை ஈழப்போராளிகளும் போராட்ட இயக்கங்களும் நிறைவேற்றியது

துயரம். பாண்டிபஜார் துப்பாக்கிச் சூடு, சூளைமேடு கொலை என்று தொடங்கிய ஆயுத நடவடிக்கை முன்னாள் இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தியின் படுகொலை வரையில் நீண்டது. இந்தத் தவறுக்கு தமிழ்நாடு பெரிய விலையைத் தானும் கொடுக்க வேண்டியிருந்தது. இன்று இந்தக் கசப்பான வரலாற்று உண்மைகளை ஏற்றுக் கொண்டு புதிய தடத்தில் காலடி வைக்க வேண்டும். அது யதார்த்தம் என்ன என்பதைப் புரிந்து கொள்வதில் இருந்து ஆரம்பிக்கப்படுவது அவசியமாகும். சில ஈழ அரசியல் பார்வையாளர்கள் கருதுவதைப் போல, தமிழகத்தின் மூலமாக இந்திய மத்திய அரசைப் பயன்படுத்தி, இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்பது மிகக் கடினமானது. ஆனால், அவர்கள் 'சென்னை ஒரு திறவு கோலாக இந்தப் பிரச்சினையில் இருக்கும்' என்று ஆழமாக நம்புகிறார்கள். அவர்களுடைய பார்வை எப்படியென்றால், ஈழத்தமிழர்களுக்குச் சாதமாக ஆதரவாக சென்னையில் (தமிழ அரசு) எடுக்கின்ற தீர்மானங்களும் கொடுக்கின்ற அழுத்தங்களும் இந்திய மத்திய அரசை இலங்கையை நோக்கித் திரும்ப வைக்கும். இலங்கையின் மீது அழுத்தத்தைக் கொடுக்க வைக்கும் என்பதாக. இதைப் படிக்கும் போது சிரிப்பு வருகிறது அல்லவா! சென்னையில் இருக்கும் ஆளுநர் ரவியோடு தினமும் தமிழ்நாடு மோத வேண்டியுள்ளது. தமிழ்நாட்டின் அதிகாரத்தையே பிடுங்க அல்லது அதில் தலையீடு செய்வதற்கு மத்தி முயற்சிக்கிறது. இதற்கு எதிராக தமிழ்நாடு போராட வேண்டியுள்ளது. இந்த நிலையில் எப்படி அது மத்தியை ஈழத்தமிழருக்கு ஆதரவாகச் சாய்க்க முடியும்?

குறைந்த பட்சம் இந்திய இலங்கை மீனவர்கள் பிரச்சினை என்ற வகையில் ஈழத்தமிழ் மீனவர்களும் தமிழக மீனவர்களும் தினமும் மோதிக் கொள்கிறார்கள். தமிழக மீனவர்களின் படகுகளைக் கடலில் வைத்துப் பறிமுதல் செய்கிறது இலங்கைக் கடற்படை. தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு இலங்கைச் சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள். இதைக் கூட இந்திய இலங்கை அரசுகள் பேசி ஒரு தீர்வுக்கு வரவில்லை. தமிழக அரசு இதில் ஒரு சரியான தீர்வை எட்ட முடியாமலிருக்கிறது. இந்தப் பிரச்சினையை ஈழத் தமிழ் அரசியல்வாதிகளும் கட்சிகளும் தமிழகத்தோடும் இந்தியாவோடும் பேசி ஒழுங்குக் கொண்டு வர முடியாமலிருக்கின்றன. இந்த நிலையில் 75 ஆண்டுக்கு மேலான இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு சென்னையைத் திறவு கோலாக்குவதென்றால்!

இங்கே நாம் இன்னொன்றையும் சொல்ல வேண்டும். ஈழத்தில் உள்ள அரசியல்வாதிகளும் அரசியற் கட்சிகளும் தமிழகத்தையும் இந்தியாவையும் அளவுக்கு அதிகமாக நம்புகின்றன் எதிர்பார்க்கின்றன. அல்லது அப்படி நடிக்கின்றன. இலங்கையின் மீது இந்தியா அரசியல் அழுத்த்தை (இலங்கை இந்திய உடன் படிக்கையின் அடிப்படையிலேனும்) கொடுக்க வேண்டும் எதிர்பார்ப்பது தவறில்லை. ஆனால், அதற்கப்பால் சில அரசியல்வாதிகளும் சில அரசியற் கட்சிகளும் தமிழ் நாட்டின் அரசியல் தலைவர்கள் சிலரோடு நெருக்கம் கொள்வதாக காட்டிக் கொள்வதும் தமிழகத்தின் ஆதரவு தமக்கு உண்டென்று கூறுவதும் தேர்தல் அரசியல் ஆதாயங்களுக்கானது மட்டுமே. தமிழக மக்களினதும் தமிழ்நாட்டு அரசினதும் ஆதரவைப் பெறுவது நல்லது. ஆனால் அது தார்மீக அடிப்படையிலானது மட்டுமே. தமிழகம் தொழில்துறைகளில் முதலீட்டை ஈழத்தில் தமிழ்ப்பகுதிகளில்செய்வதாக இருந்தாலும் இலங்கை அரசு, இந்திய மத்திய அரசு ஆகியவற்றின் ஆதரவும் உடன்பாடும் வேண்டும். இந்த நிலையில் எப்படி ஈழ விடுதலை அரசியலில் தமிழ்நாடு முழுமுனைப் போடு செயற்பட முடியும்? தமிழ்நாடு சட்டமன்றில் ஒரு தீர்மானம் ஈழத்தமிழருக்கு ஆதரவாக எடுக்கப்பட்டால், அதனைக் கண்டு சீற்றமடைகின்றது சிங்களத் தரப்பு. சிங்களத் தரப்பின் அந்தச் சீற்றம் ஒடுக்குமுறையாக ஈழத்தமிழர்களின் மீது பிரயோகிக்கப்படுகிறது. அந்த ஒடுக்குமுறையைக் கட்டுப்படுத்தும் (22ம் பக்கம் பார்க்க)


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com




# ஈரானைத் தாக்குவது ஒரு பரந்த பிராந்திய மோதலைத் தூண்டும் ட்ரம்ப்பை ஏற்கனவே எச்சரித்த அமெரிக்க உளவுத்துறை!

ஈரானின் பதிலடி தாக்குதல் தனக்கு ஆச்சரியமளித்ததாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்த நிலையில், ஈரானை தாக்குவது அமெரிக்காவின் வளைகுடா நட்பு நாடுகளுக்கு எதிரான பதிலடித் தாக்குதல்களைத் தூண்டிவிடும் என அவருக்கு முன்னரே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாக அமெரிக்க உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் மற்றும் குவைத் ஆகிய நாடுகளின் மீது ஈரான் நடத்திய பதிலடித் தாக்குதல்கள் தமக்கு ஆச்சரியமளித்ததாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 16 மார்ச் 2026 இருமுறை தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையில் பேசிய ட்ரம்ப், ஈரான் மத்திய கிழக்கில் உள்ள மற்ற அனைத்து நாடுகளையும் குறிவைத்துத் தாக்க முற்பட்டிருக்கக் கூடாது. இதை நாங்கள் யாரும் எதிர்பார்க்கவில்லை. இதனால் நாங்கள் அதிர்ச்சியடைந்தோம்' என்றார்.

இந்த சூழலில் அமெரிக்க உளவுத்துறை தரப்பில் வெளியான தகவல்களில், ஈரான் மீது தாக்குதல் நடத்தினால், பொருளாதார ரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஹார்முஸ் ஜலசந்தியை மூட ஈரான் முற்படக் கூடும் என ட்ரம்ப்புக்கு தகவல் அளிக்கப்பட்டிருந்தது. ஈரான் மீது தாக்குதல் நடத்துவது ஒரு பரந்த பிராந்திய மோதலைத் தூண்டக்கூடும் என்றும், குறிப்பாக வளைகுடா நாடுகள் அமெரிக்கத் தாக்குதல்களை அங்கீகரிப்பதாகவோ அல்லது ஆதரிப்பதாகவோ ஈரான் கருதினால், அந்நாடுகளின் தலைநகரங்கள் மீது ஈரான் பதிலடி தாக்குதல் நடத்தக்கூடும் என்று போருக்கு முன்னரே ட்ரம்ப்புக்கு விளக்கமளிக்கப்பட்டிருந்ததாகவும் ஒரு அதிகாரி தெரிவித்தார்.



மேலும், அமெரிக்கா - இஸ்ரேல் தாக்குதல்களுக்கு முன்னதாகவே, இஸ்ரேல் திட்டமிட்டுள்ள தாக்குதல்கள் மூலம் ஈரானிய தலைவர்களைக் கொல்ல முயல்வது, வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ மற்றும் தூதரகத் தளங்கள் மீது ஈரான் பதிலடி கொடுப்பதற்கு வழிவகுக்கக் கூடும் என்று அமெரிக்க உளவுத்துறை கணித்திருந்தது எனத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீது பிப்ரவரி 28-ல் அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக தாக்குதலை தொடங்கியது. இதற்கு பதிலடியாக கடந்த இரண்டு வாரங்களாக, ஈரானிய ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் வளைகுடா நாடுகளில் உள்ள பல்வேறு இலக்குகளைத் தாக்கியுள்ளன. அதே போல, உலகின் மொத்த எண்ணெய் விநியோகத்தில் 20 சதவீதம் பங்கு வகிக்கும் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக நடைபெறும் அனைத்து கப்பல் போக்குவரத்தையும் ஈரான் நிறுத்தியுள்ளது் இதனால் உலகளாவிய எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்துள்ளன.

இதேவேளை ஈரானின் புரட்சிகர பாதுகாப்புப் படை வெளியிட்டுள்ள அறிக்கையில், ''குழந்தைகளைக் கொல்லும் இந்தக் குற்றவாளி (நெதன்யாகு) உயிரோடு இருந்தால், எங்களது முழு பலத்தையும் கொண்டு அவரைப் பின்தொடர்ந்து தேடிச் சென்று கொல்வோம் என கூறப்பட்டுள்ளது. இதனிடையே அமெரிக்க அரசியல் வர்ணனையாளர் கேண்டஸ் ஓவன்ஸ் உட்பட பலரும், 'பிபி எங்கே? (நெதன்யாகுவின் செல்லப்பெயர்) எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# பா.ஜ.க, அ.தி.மு.க போன்ற கட்சிகளுடன் கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தை இல்லை



பாஜக- அதிமுக போன்ற கட்சிகளுடன் கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறவில்லை. இது தொடர்பாக வெளியாகும் செய்திகள் அனைத்தும் வதந்தி' என தமிழக வெற்றிக் கழகம் சார்பில் விளக்க அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பாக கட்சியின் இணை பொது செயலாளர் நிர்மல் குமார் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, சமீபகாலமாக சில ஊடகங்களிலும் சமூக வலைதளங்களிலும் அரசியல் லாபத்திற்காக திட்டமிட்டு சில பொய்யான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன

குறிப்பாக பாஜக -அதிமுக, திருமதி சசிகலா, மருத்துவர் ஐயா ராமதாஸ் ஆகியோர்களை தமிழக வெற்றிக் கழகத்துடன் தொடர்புபடுத்தி கூட்டணி பேச்சு வார்த்தைகள் நடத்தப்படுவதாக கூறப்படும் தகவல்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை. குறிப்பிட்ட கட்சிகள் மற்றும் அரசியல் தலைவர்களுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தையும், எந்த மட்டத்திலும் நடைபெறவில்லை என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறோம். இதே போன்ற பொய் செய்தி உத்தியை காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளோடு தொடர்புபடுத்தியும் கடந்த காலங்களில் கடைப்பிடிக்கப்பட்டதும் அது உண்மை இல்லை என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று.

இருப்பினும் பொது மக்களிடையேயும் தொண்டர்கள் இடையேயும் தொடர்ந்து குழப்பத்தை விளைவிப்பதற்காகவே இத்தகைய ஆதாரமற்ற செய்திகள் திமுகவினரால் பரப்பப்படுகின்றன.

செய்தியின் உண்மைத் தன்மையை ஆராயாமல் இத்தகைய வதந்திகளை பகிர வேண்டாம்.' என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதனால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதியன்று தமிழகத்தில் நடைபெறும் பொது தேர்தலில் திமுக - அதிமுக - நாம் தமிழர் மற்றும் தமிழக வெற்றிக் கழகம் ஆகிய நான்கு முனை போட்டி நடைபெறுவது உறுதி என அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.